
தினபூமி
thinaboomi.com
பூமி: 26 சுற்று: 143 ஐப்பசி 17
Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003
சேலம், திங்கள், நவம்பர் 03, 2025
சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**போலியான விளம்பரம் விவகாரம்: கனடாவுடன் வர்த்தக பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பே இல்லை: அதிபர் ட்ரம்ப் திட்டவட்டம்**
....2-ம் பக்கம்

**ஆபரேஷன் சிந்தூர் 2.0: பாகிஸ்தானுக்கு இந்திய ராணுவ தளபதி எச்சரிக்கை**
...3-ம் பக்கம்

**வாஷிங்டன் சுந்தர் அபாரம்: 3-வது டி-20 போட்டியில் ஆஸி.,யை வென்றது இந்தியா**
....6-ம் பக்கம்






சென்னை தியாகராய நகரில் உள்ள ஓட்டல் அகார்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தமிழகத்தில் தொடங்கப்படவுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ஆலோசிக்க அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், வி.சி.க. உள்ளிட்ட 49 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளை 2026-ல் நடைபெறவுள்ள

# சட்டசபை தேர்தலுக்கு பிறகு நடத்த வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, நவ. 03-

**தமிழகத்தில் வாக்காளர் சிறப்பு திருத்த பணிகளை 2026-ல் நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலுக்கு பிறகு நடத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுவரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**12 மாநிலங்களில்...**

சென்னையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ஆலோசிக்க அனைத்துக் கட்சி கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் உள்பட 20 கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. பீகாரைத் தொடர்ந்து, தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடங்கப்படும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. அதன்படி, தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள், நாளை (நவ. 4) முதல் தொடங்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**ஆலோசனை கூட்டம்...**

இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அவசர அவசரமாகச் செய்யக் கூடாது என்றும், கால அவகாசம் கொடுத்து செய்ய வேண்டும் எனவும், நடைமுறைச் சிக்கல்கள் இல்லாமல் செய்ய வேண்டும் என்றும், ஏப்ரல் மாதம் தேர்தலை வைத்துக் கொண்டு இப்போது இதனைச் செய்ய தொடங்குவது சரியானது அல்ல. முறையானது அல்ல என்று தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

**ஏற்க இயலாதது...**

தீர்மானத்தில், பீகார் மாநில எஸ்.ஐ.ஆர். வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கின்ற நிலையில், குறிப்பாக அந்த வழக்கில் இறுதித் தீர்ப்பு வெளிவராத காலகட்டத்தில், தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டு வந்துள்ளது ஏற்க இயலாதது. நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் பெரும்பாலும் இந்த எஸ்.ஐ.ஆர்.-க்கு தொடக்கம் முதலில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருவதை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தேர்தல் ஆணையம்...**

நமது அச்சத்துக்கு மிக முக்கியமான காரணம், பீகார் மாநிலத்தில் நடைபெற்றவை ஆகும். சிறுபான்மையினர் வாக்குகள், பா.ஜ.க.,வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு – தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு பீகார் மாநிலத்தில் இந்த நடவடிக்கையானது நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக எந்தப் பதிலையும் மக்கள் மன்றத்துக்கோ, சுப்ரீம் கோர்ட்டுக்கோ இந்தியத் தேர்தல் ஆணையம் சொல்லவில்லை. மத்திய பா.ஜ.க.,வின் கைப்பாவையாகத் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

**12 மாநிலங்களில்...**

பீகாரில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டிப் புதைப்பதாகவும் உள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 169-இன்படி ஒன்றிய அரசின் அரசிதழில் முறைப்படி அறிவிப்பு வெளியிட்டு அதன் மூலமே வாக்காளர் பட்டியல் திருத்தம் எஸ்.ஐ.ஆர். செய்யப்பட வேண்டும். அந்த முறையைப் பின்பற்றாமல் தேர்தல் ஆணையமே அறிவிப்பைத் தன்னிச்சையாக வெளியிடுவது, அரசியல் சட்டத்திற்கும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்திற்கும் எதிரானது.

**சட்டவிரோதமாகும்...**

இப்போது செய்யப்பட்டுள்ள எஸ்.ஐ.ஆர். அறிவிப்பே சட்டவிரோதமாகும். ஆதார் அட்டையை 12-ஆவது ஆவணமாகச் சேர்க்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டும், இப்போது தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள 27.10.2025 அறிவிப்பில்

(கடைசி பக்கம் பார்க்க)

## எஸ்.ஐ.ஆர். தொடர்பான கூட்டத்தில் பங்கேற்ற

# 49 கட்சிகளின் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி

சென்னை, நவ. 03-

**எஸ்.ஐ.ஆர். தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்ற 49 கட்சிகளின் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தை படுகொலை செய்யும் நோக்கோடு அவசர கதியில் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர்.-க்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை. வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் - ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்காததால், உச்சநீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்று தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் எஸ்.ஐ.ஆர் குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.எம்.எஸ்.-03 கண்காணிப்பு செயற்கைக்கோளுடன்

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த எல்.வி.எம்.3 ராக்கெட்

ஸ்ரீஹரிகோட்டா, நவ. 03-

**கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதற்கான சி.எம்.எஸ்.-03 செயற்கைக்கோளுடன் எல்விஎம் -3 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.**

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் நேற்று (நவ. 2) மாலை பாய்ந்தது. கடந்த 2013-ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்-7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள் காலம் விரைவில் நிறைவடைய உள்ளதால், இதற்கு மாற்றாக சுமார் ரூ.1,600 கோடியில் அதிநவீன சி.எம்.எஸ்.-03 (ஜிசாட்-7ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்தது.

சி.எம்.எஸ்.-03 செயற்கைக்கோள் 4,400 கிலோ எடை கொண்டதால், புவி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட செயற்கைக்கோள்களில் அதிக எடையுடையதாக சி.எம்.எஸ்.-03 உள்ளது. இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட செயற்கைக் கோள்களில் அதிக எடை உடையதால், இந்த செயற்கைக்கோள் சுமந்து செல்லும் ராக்கெட், பாகுபலி ராக்கெட் எனப்படுகிறது.

இந்திய பாதுகாப்புத் துறையின் கண்காணிப்புப் பணிகளுக்காக இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட உள்ளது. இந்திய கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதுடன், போர்க் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கு இடையே தொலைத்தொடர்பு சேவையை மேம்படுத்தவும் சி.எம்.எஸ்.-03 செயற்கைக்கோள் உதவும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது

**வெற்றிகரமாக நிலைநிறுத்தம்**

**இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவிக்கையில், எல்.வி.எம்.-3 ராக்கெட் மூலம் சி.எம்.எஸ்.-03 செயற்கைகோள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. சி.எம்.எஸ்.-03 அதிக எடையுடைய செயற்கைக்கோள். இதன் பயன்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அனைத்தும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடைபெற்றது. எல்விஎம் 3 ராக்கெட் மூலம் 100% வெற்றி கிடைத்துள்ளது என்றார்.**

## சூடு பிடித்த பீகார் சட்டப்பேரவை தேர்தல் களம்:

# ஒரே நாளில் பிரதமர் மோடி, ராகுல், அமித்ஷா பிரச்சாரம்

பீகார், நவ. 03-

**பீகார் சட்டசபை தேர்தலை முன்னிட்டு நேற்று ஒரேநாளில் பிரதமர் மோடி, ராகுல், அமித்ஷா பிரச்சாரம் செய்த நிலையில் அங்கு தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.**

பீகார் சட்டசபைக்கு முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கு வருகிற 6-ம் தேதி வாக்குப்பதிவு நடக்கிறது. 2-வது கட்டமாக எஞ்சிய 122 இடங்களுக்கு 11-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி தலைவர்கள் பீகாரில் முற்றுகையிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பிரதமர் மோடி உள்ளிட்ட பா.ஜ.க தலைவர்கள் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தும், பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தும் வாக்கு சேகரித்து வருகிறார்கள்.

பிரதமர் மோடி, ராகுல் காந்தி, அமித்ஷா ஆகியோர் பீகாரில் நேற்று முற்றுகையிட்டு பிரச்சாரம் செய்தனர். பிரதமர் மோடி நேற்று 2 பிரசார பொதுக்கூட்டங்களில் பேசினார். ரோடுஷோவிலும் பங்கேற்றார். பாட்னாவில் நேற்று மெகா ரோடுஷோ நடந்தது. கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு அவரது 3-வது ரோடுஷோ இதுவாகும்.

ஆபரேஷன் சிந்தூருக்கு பிறகு இங்கு ரோடு ஷோவில் ஈடுபட்டார். முன்னதாக ஆரா மற்றும் நவாடா ஆகிய 2 இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் பா.ஜ.க வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி பேசினார். மோடி ஏற்கனவே 2 முறை பீகாரில் பிரச்சாரம் செய்து இருந்தார்.

இதேபோல மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா முசாபர்பூர் மற்றும் வைஷாலி ஆகிய 2 இடங்களில் பிரச்சாரம் செய்தார். இன்டியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ராகுல்காந்தி ஏற்கனவே பிரச்சாரம் செய்தார். அவர் நேற்று பெகுசராய், ககாரியா ஆகிய 2 இடங்களில் நடைபெற்று பொதுக் கூட்டத்தில் பேசினார். தலைவர்கள் முற்றுகையால் பீகார் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

## இலங்கை கடற்படையினரால் துப்பாக்கி முனையில்

# ராமேசுவரம் மீனவர்கள் விரட்டியடிப்பு

ராமேசுவரம், நவ. 03-

**வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த 2 வாரங்களாக பரவலாக நல்ல மழை பெய்தது. ஆந்திராவில் கரையை கடந்த மோன்தா புயல் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. இதனால் ராமேசுவரம் மீனவர்கள் 10 நாட்களாக கடலுக்கு செல்லாமல் இருந்தனர்.**

இதையடுத்து கடலுக்கு சென்ற மீனவர்கள் குறைந்த அளவு மீன்களுடன் கரை திரும்பினர். இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை ராமேசுவரத்தில் இருந்து 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்துறை அலுவலக அனுமதியுடன் கடலுக்கு சென்றனர். அவர்கள் இந்திய கடல் எல்லையில் கச்சத்தீவு அருகே வலைகளை விரித்து மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர்.

நேற்று அதிகாலை அந்த பகுதிக்கு இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் ஒன்று வந்தது. அதிலிருந்த வீரர்கள் ராமேசுவரம் மீனவர்களை பார்த்து இது எங்கள் நாட்டு எல்லை, இங்கு மீன்பிடிக்க அனுமதி கிடையாது என்று பலமுறை எச்சரித்தும் ஏன் வருகிறீர்கள்? என்று கூறியதுடன், அவர்களை நோக்கி துப்பாக்கியை காட்டி மிரட்டினர். அத்துடன் தொடர்ந்து அந்த பகுதியில் மீன்பிடிக்க விடாமல் தடுத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் உடனடியாக கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரானார்கள். ஆனாலும் நீண்ட தூரம் வரை ராமேசுவரம் மீனவர்கள் மீது கற்களை வீசியும், வலைகளை அறுத்து கடலில் வீசியும் துரத்தியடித்து அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், ராமேசுவரம் மீனவர்கள் மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது, சிறை பிடிப்பது, விரட்டி அடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளது. இதனால் ராமேசுவரம் இதை தடுக்க வேண்டிய மத்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இலங்கை அரசுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்து வருகிறது. இதனால் ராமேசுவரம் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே ராமேசுவரம் மீனவர்கள் நலனை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் பிரச்சனையின்றி மீன் பிடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# உருவானது புயல் சின்னம்

சென்னை, நவ. 03-

**வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று காலை 5.30 மணிக்கு உருவானதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.**

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி கிழக்கு மத்திய வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய மியான்மர் கடற்கரையில் உருவாகி உள்ளது.

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் மியான்மர் - வங்கதேச கடற்கரையில் வடக்கு, வடமேற்கு நோக்கி நகர வாய்ப்பு உள்ளது.

தற்போது உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்திற்கு பாதிப்பு இருக்காது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 6 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, நவ. 03-

**தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நவ. 8 வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.**

மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு - வடகிழக்கு திசையில் நகர்ந்து, கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறைந்துள்ளது.

இது மேலும் வடக்கு-வடகிழக்கு திசையில் நகர்ந்து வலுவிழக்கக்கூடும்.

மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மார் கடலோரப்பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது.

இது, வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மியான்மார் மற்றும் வங்கதேச கடற்கரையை ஒட்டி நகரக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நவ. 5 - 6: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நவ. 7: வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நவ. 8: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -465.75 | -155.75 | 1 சவரன் ₹90,480 | 1 கிலோ ₹166,000 | ₹88.79 | ₹100.75 |
| பாயின்ட் 83,938.71 | பாயின்ட் 25,722.10 | 1 கிராம் ₹11,310 | 1 கிராம் ₹166.00 | | டீசல் ₹92.34 |

### போலியான விளம்பரம் விவகாரம்:
# கனடாவுடன் வர்த்தக பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பே இல்லை: ட்ரம்ப் திட்டவட்டம்

**ஒட்டாவா, நவ. 03-**

கனடா உடனான வர்த்தக பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பே இல்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து உலக நாடுகளிடம் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு பரஸ்பர வரிவிதித்து வருகிறார். அண்டை நாடான கனடாவில் இருந்து அமெரிக்கா 75 சதவீதம் அளவிலான பொருட்களை கொள்முதலான நிலையில் அதனை தவிர்க்க அந்த நாட்டின் மீது 25 சதவீதம் வரி விதித்தார்.

மேலும் பெண்டானிலின் ரசாயனத்தை சீனா, ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்ததற்காக மேலும் 10 சதவீதமாக அதிகரித்து 35 சதவீதம் வரிவிதிக்கப்பட்டது. இந்தநிலையில் கனடாவின் புகழ்பெற்ற ஒண்டோரியா மாகாண கவர்னரான டோக்



போர்டு அனுமதியுடன் சர்ச்சைக்குரிய விளம்பரம் ஒன்று அங்குள்ள தொலைக்காட்சிகளில் அரசு சார்பில் ஒலிபரப்பப்பட்டது. அந்த விளம்பரத்தில் ட்ரம்புக்கு எதிரான கருத்துகள் பதிவிடப்பட்டிருந்ததும், அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ரீகனின் 'வரிவிதிப்புகள் வர்த்தக போருக்கு வித்திட்டு பொருளாதார பேரழிவை உண்டாக்கும்' என்ற பிரபல வரிகளும் அதனோடு இணைக்கப்பட்டன.

இந்த விளம்பரம் ட்ரம்புக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து கனடா பிரதமர் மார்க் கார்னி ட்ரம்பிடம் தொலைபேசியில் பேசினார். மேலும் இது குறித்து பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு விளம்பர ஒலி பரப்புக்கு தடை விதிப்பதாக தெரிவித்தார். இந்தநிலையில் கனடா உடனான வர்த்தக பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பே இல்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுகுறித்து ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், "கனடா எனக்கு மிகவும் பிடிக்கும். மார்க் கார்னி என்னுடைய நல்ல நண்பர் தான். இருப்பினும் அந்த போலியான விளம்பரம் எனக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது. இதனால் கனடா உடன் எந்த வர்த்தக பேச்சுவார்த்தையில் ஈடுபட போவதில்லை" என்றார்.

### போதைப்பொருள் கடத்தி வந்த
# படகு மீது அமெரிக்கா தாக்குதல் - 3 பேர் பலி

**வாஷிங்டன், நவ. 03-**

கரீபியன் தீவுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப் பொருள் கடத்தி வந்த படகு மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் போதைப்பொருள் கடத்தி வந்த 3 பேர் உயிரிழந்தனர்.

வெனிசுலா, மெக்சிகோ போன்ற நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக ஜனாதிபதி டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். மேலும், கடல் வழியாக போதைப்பொருள் கடத்தி வரும் கும்பல் மீது தாக்குதல் நடத்தவும் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, வெனிசுலாவில் இருந்து கடல் வழியாக படகில் போதைப் பொருள் கடத்தி வந்த கும்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலில் இதுவரை 65 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கரீபியன் தீவுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வந்த படகு மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. கரீபியன் கடல் வழியாக சர்வதேச கடல் பரப்பில் வந்துகொண்டிருந்த படகு மீது டிரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் படகில் போதைப்பொருள் கடத்தி வந்த 3 பேர் உயிரிழந்தனர்.

# பீகார்: தேர்தல் பிரச்சாரத்திற்கு மத்தியில் மீன்பிடித்த ராகுல்..!

**பாட்னா, நவ. 03-**

பீகாரில் தேர்தல் பிரச்சாரத்திற்கு மத்தியில் சிறிது நேரம் ஒதுக்கி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் மீன் பிடிக்கச் சென்றார்.

பீகார் சட்டப்பேரவைக்கு முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கு வரும் 6-ஆம் தேதி வாக்குப்பதிவு நடக்கிறது. இதையொட்டி தலைவர்கள் பீகாரில் முற்றுகையிட்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் தேர்தல் பிரசாரத்திற்கு இடையே சிறிது நேரம் ஒதுக்கி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீன் பிடிக்கச் சென்றார்.

பெகுசரை மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் முடிந்த பிறகு அவர் மீன்பிடிக்கச் சென்றார். ராகுல் காந்தி ஒரு படகில் ஏறி குளத்தின் நடுவில் சென்றார். அவருடன் மாநில முன்னாள் அமைச்சர் முகேஷ் சாஹ்னி சென்றிருந்தார்.

அந்த இடத்தில் பல மீனவர்கள் இருந்தனர். ராகுல் காந்தியுடன் சேர்ந்து இடுப்பு ஆழம் வரை தண்ணீரில் பலர் இறங்கினர். இந்நிகழ்வின் காணொளி காங்கிரஸின் எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டுள்ளது.

அப்போது, ராகுல் காந்தியுடன் மீனவர்கள் தங்கள் தொழிலில் சந்திக்கும் சவால்கள் மற்



றும் போராட்டங்கள் குறித்து எடுத்துக்கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்த விடியோ இணையளதங்களில் வைரலாகி வருகிறது.

# ரஷ்ய எண்ணெய் கப்பல் மீது உக்ரைன் டிரோன் தாக்குதல்

**மாஸ்கோ, நவ. 03-**

ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ரஷ்யாவின் முக்கிய துறைமுகம் மற்றும் எண்ணெய் கப்பல் மீது உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தி உள்ளது.

ரஷ்யாவின் கருங்கடல் துறைமுகமான துவாப்சை குறிவைத்து டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கிருந்த எண்ணை கப்பல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் எண்ணை கப்பல் மற்றும் துறைமுகம் தீப்பிடித்து எரிந்தது. உடனே அங்கிருந்த பணியாளர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்த தாக்குதலில் துறைமுகம் மற்றும் எண்ணை கப்பல் கடும் சேதம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. துறைமுகத்தின் கட்டிடங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துவாப்ஸ் துறைமுகம் ரஷ்யாவின் கச்சா எண்ணை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களை சர்வதேச சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கான முக்கிய பகுதிகளில் ஒன்றாகும். இந்த தாக்குதலால் ரஷ்யாவின் கச்சா எண்ணை விநியோகம் பாதிக்கப்படும்.

துவாப்ஸ் துறைமுகத்தில் உள்ள எண்ணை முனையம், ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணை நிறுவனமான ரோஸ்நெப்ட்டுக்கு சொந்தமானது. சமீபத்தில் இந்த நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதார தடையை விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே துவாப்ஸ் அருகே உள்ள சோஸ்னோவி கிராமத்திலும் டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அடுக்குமாடி கட்டிடம் சேதமடைந்தது. மேலும் துவாப்சில் உள்ள ரெயில் நிலையத்திலும் சிறிது சேதங்கள் ஏற்பட்டது.

# லண்டனில் ஓடும் ரயிலில் கத்திக்குத்து: இருவர் கைது

**புதுடெல்லி, நவ. 03-**

லண்டன் செல்லும் ரயிலில் (சனிக்கிழமை) நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் பத்து பேர் காயமடைந்தனர். இது தொடர்பாக இரண்டு பேரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். காயமடைந்தவர்களில் ஒன்பது பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டான்காஸ்டரிலிருந்து லண்டனின் கிங்ஸ் கிராஸ் நிலையத்திற்கு ரயில் சென்று கொண்டிருந்தபோது, நேற்று இரவு உள்ளூர் நேரப்படி 7.30 மணிக்கு பீட்டர்பரோ நிலையத்திலிருந்து ரயில் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்தது. அந்த ரயில் உடனடியாக ஹண்டிங்டன் நிலையத்தில் நிறுத்தப்பட்டு போலீசார் விரைந்துசென்றனர்.

பெரிய கத்தியுடன் வந்த ஒரு மர்ம நபர் அனைவரையும் குத்தியதாகவும், எல்லா இடங்களிலும் ரத்தம் இருந்தது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் சாட்சியம் அளித்தார். திடீரென நடந்த இந்த கத்திக்குத்து பயங்கரத்திலிருந்து தப்பிக்க சிலர் கழிப்பறைகளில் ஒளிந்துகொண்டனர். சிலர் ஓட முயன்றபோது மற்றவர்களால் மிதிபட்டு காயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 2 பேரை கைது செய்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு போலீசார், தங்கள் விசாரணையை தொடங்கியுள்ளனர். இதுகுறித்து பேசிய பிரிட்டன் போக்குவரத்து காவல்துறை தலைமை கண்காணிப்பாளர் கிறிஸ் கேசி, "என்ன நடந்தது என்பதை கண்டறிய நாங்கள் அவசர விசாரணைகளை நடத்தி வருகிறோம். சம்பவத்துக்கான காரணத்தை விரைவில் கண்டறிவோம் " என்று கூறினார்.கத்திக்குத்து சம்பவத்துக்கு இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், 'அப்பகுதியில் உள்ள அனைவரும் காவல்துறையின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

### கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்
# யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் எடப்பாடியாரை பாராட்ட வேண்டும்
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி



**மதுரை, நவ. 03-**

கட்சிக்கு விரோதமாக யார் செயல்பட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய எடப்பாடியாரை நாம் பாராட்ட வேண்டும் மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட 83-வது வார்டு சோலை அழகுபுரத்தில் அங்கன்வாடி புதிய கட்டிடம் அமைப்பதற்கான பூமி பூஜையை கவுன்சிலர் எஸ்.எம்.டி. ரவி தலைமையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா.குமார், கு.திரவியம், பேராசிரியர் உசிலை ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், பைக்காரா கருப்பசாமி, முத்துவேல், ஏ.தங்கபாண்டி மற்றும் வட்ட செயலாளர்கள் பால்பாண்டி, பாலமுருகன், சண்முகசுந்தரம், பால சக்திவேல், ராமகிருஷ்ணன், சரவணன், செந்தில்குமார், கணேசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

இந்தப் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்ததை தற்போது மாமன்ற உறுப்பினரின் முயற்சியில் மீட்டெடுக்கப்பட்டு தற்போது இந்த பகுதி மக்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றுள்ளது.இப்பகுதியில் இருக்கக்கூடிய சுமார் 973 குடியிருப்பு வாசிகளுக்கு தடையில்லா சான்றிதழ் பெற்று பட்டா வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.இந்தியாவை கைப்பற்ற கஜினி முகமது 48 முறை படையெடுத்தார்.ஆனால் நான் பல முறை படையெடுத்து முயற்சி செய்தது இப்பகுதி மக்களுக்காக தான்.

இப்பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்துத்துறை அதிகாரிகளிடத்திலும் பலமுறை மனு கொடுத்தும் எந்த பிரயோஜனமும் இல்லை. அ.தி.மு.க. ஆட்சி காலகட்டத்தில் மிகச்சிறந்த ஒரு மாநகராட்சியாக திகழ்ந்த மதுரை மாநகராட்சி தற்போது என்னவென்று உங்களுக்கு தெரியும்.17 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மாடக்குளம் பகுதியில் கரைகளை பலப்படுத்தக்கூடிய பணிகள் நடைபெற்று வரக்கூடிய வேளையில் கரைகள் பலவீனம் இன்றி உடைப்பு ஏற்பட்டது அறிந்து களத்திற்கு சென்ற நான் குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தது அதற்குப் பிறகு பல நாட்கள் கழித்து அமைச்சர் மூர்த்தி அங்கே சென்றார். அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தற்போது அந்த பகுதியில் அவர் தூர் வாரும் பணிகளை மேற்கொண்டு வருகிறார். எது எப்படியோ எங்களுக்கு பகுதி மக்களுக்கு நல்லது நடந்தால் சரிதான்.

இ.பி.எஸ்.செங்கோட்டையனை நீக்கி இருக்கிறார். தலைமை சொல்வதற்கு யாராக இருந்தாலும் கட்டுப்பட்டு தான் நடக்க வேண்டும். எனக்கும் கூடத்தான் மன வருத்தம் இருக்கு.யாருக்கு மன வருத்தம் இருந்தாலும் அதை பொதுச் செயலாளரை பார்த்து தான் சொல்ல வேண்டும். அதை விடுத்துவிட்டு ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கக் கூடாது.பொதுச் செயலாளர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாங்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏற்கத் தான் செய்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒரு மன வருத்தம் என்றால் அதை பொது வெளியில் சொல்லக்கூடாது எனக்கு எந்த மன வருத்தமும் கிடையாது. என்னை நன்றாகத் தான் வைத்திருக்கிறார்.

கரூர் சம்பவம் குறித்து நடிகர் அஜித்தின் கருத்து குறித்த கேள்விக்கு ??நடிகர் அஜித் இவ்வளவு நாட்கள் கழித்து ஏன் சொன்னார் எதற்கு சொன்னார் என்று தெரியவில்லை.ஒருவேளை மீண்டும் படப்பிடிப்பிற்கு அவர் செல்கிறாரா என்று தெரியவில்லை. இவ்வளவு நாட்களாக மௌனம் சாதித்து விட்டு தற்போது ஏன் சொல்லுகிறார்.

தன்னை நோக்கி வரக்கூடிய அனைத்து பந்துகளையும் சிக்ஸர் அடிக்கிறார். எடப்பாடி பழனிச்சாமி கட்சிக்கு விரோதமாக யார் செயல்பட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லக்கூடிய எடப்பாடியாரை நாம் பாராட்டி தான் ஆக வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு உள்ள சூழலில்
# அவசரமாக எஸ்.ஐ.ஆரை அமல்படுத்துவது ஏன்..?
### ஆர்.எஸ்.பாரதி கேள்வி

**சென்னை, நவ. 03-**


தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்டமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. தமிழகத்தில் நாளை மறுநாள் இதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன.

ஆனால், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தமிழக மக்களின் வாக்குரிமையை பறிக்கும் சதி திட்டமிது என கூறி இதற்கு எதிராக போராடிட, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நவம்பர் 2-ந் தேதி அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. கூட்டணி கட்சிகள் அறிவித்தன. இதன்படி, தமிழகத்தில் உள்ள 60 கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் பங்கேற்கும் அனைத்து கட்சி கூட்டம் இன்று காலை 10 மணி அளவில், தியாகராய நகரில் உள்ள "ஓட்டல் அகார்டில்" தொடங்கியது. எனினும், இந்த கூட்டத்தில் பங்கேற்காமல் விஜய் தலைமையிலான த.வெ.க. புறக்கணித்து உள்ளது. நாம் தமிழர், பா.ம.க. உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கட்சிகளும் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், எஸ்.ஐ.ஆர். தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு வராதவர்கள் கோழைகள் என தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் பேசுகையில், அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு வராதவர்களை பற்றி கவலைப்பட தேவையில்லை. வந்தவர்களை வரவேற்கிறோம். அவர்களுக்கு ஜனநாயக உரிமை இருக்கிறது. அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு வந்தவர்கள் வீரர்கள். வராதவர்கள் பயந்தாங்கொள்ளிகள். பா.ஜ.க.வை எதிர்க்க பயந்தவர்கள் அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்கவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு உள்ள சூழலில் அவசரமாக எஸ்.ஐ.ஆரை அமல்படுத்துவது ஏன்? நீதிமன்றத்தின் மூலம்தான் எதையும் தீர்க்க முடியும். எங்களுக்கு நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை உண்டு. எஸ்.ஐ.ஆர்.க்கு எதிரான அனைத்துக்கட்சி கூட்டத்தில் 49 கட்சிகள் பங்கேற்றன." இவ்வாறு அவர் பேசினார்.

**03-11-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பெண்கள் செய்யும் வீண் செலவால் விரக்தி ஏற்படும். கோபத்தால் வீண்வம்பை விலைக்கு வாங்காதீர்கள். எதிர்பாராத இட மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**ரிஷபம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். புதிய நண்பர்களின் உதவியால், வாழ்க்கையில் முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**மிதுனம்:-** அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பாரக்கலாம். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். மனதில் நிம்மதியும், உடலில் ஆரோக்கியமும் பெருகும்.

**கடகம்:-** தெய்வீக ஈடுபாடு, தானதரும சிந்தனைகள் அதிகரிக்கும். தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும். இனிய பயணங்கள் இன்பம் தரும். புத்திர பாக்கியம் ஏற்படலாம்.

**சிம்மம்:-** வழக்கு வியாஜ்யங்களை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிந்து நடந்தால் தண்டனைகளைத் தவிர்க்கலாம். நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

**கன்னி:-** வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். காரிய வெற்றிகள் களிப்பைத் தரும். தன்னம்பிக்கை கூடும். அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும்.

**துலாம்:-** அனைத்து விதத்திலும் ஆதாயம் அடைவீர்கள். பயணத்தால் பயனடைவீர்கள். புதிய தோழியின் நட்பால் மனமகிழ்ச்சி ஏற்படும். வீடு, மனை வாங்கும் விரும்பங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:-** பயணத்தின் போது தடங்கல் ஏற்படலாம். குழந்தைகளுக்குச் சிறு உபாதைகள் ஏற்படலாம். உங்கள் திறமையால் பல சாதனைகள் புரிந்தாலும் நல்ல பெயர் கிடைக்காது.

**தனுசு:-** நிம்மதி குறைவதால், நித்திரை குறையும். வீட்டில் பொருட்களை மிகுந்த பாதுகாப்புடன் வைத்தால் இழப்பைத் தவிர்க்கலாம். அன்னைக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

**மகரம்:-** குழந்தைகளால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். துணைவியின் ஒத்துழைப்பால் துன்பம் தீரும். தனலாபம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும்.

**கும்பம்:-** பெற்றோரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மேலதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் மேன்மை அடையலாம். பிறரிடம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்:-** பெயரும், புகழும் உயரும். பணவரவு உண்டு. பெரியோர் பாசம் காட்டுவர். மனதில் திருப்தி, மகிழ்ச்சி, வியாபாரத்தால் போதிய பணவரவு என யோகங்கள் தரும் நாள்.

# அ.தி.மு.க.வில் இருந்து நீக்கம்: செங்கோட்டையன் ஆலோசனை

**ஈரோடு, நவ. 03-**

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவது குறித்து கோபிசெட்டிபாளையத்தில் தனது இல்லத்தில் சட்ட வல்லுநர்களுடன் செங்கோட்டையன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடந்த தேவர் ஜெயந்தி விழாவில் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் சந்தித்து பேசினார். இது தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கினார். அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது,

தொடர்ந்து 53 ஆண்டுகளாக கட்சிக்காக பணியாற்றிய என்னிடம் விளக்கம் கேட்காமலே திடீரென நீக்கம் செய்தது வேதனையாக உள்ளது. எடப்பாடி பழனிசாமி 1989-ம் ஆண்டு தான் அ.தி.மு.க.வுக்கே வந்தார் என்பதை நினைவுப்படுத்துகிறேன். துரோகம் செய்வதில் நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால், அது எடப்பாடி பழனிசாமிக்கே அளிக்க வேண்டும். நான் இன்னும் அ.தி.மு.க. தொண்டனாகவே உள்ளேன். எனக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் எதுவும் அனுப்பாமல் கட்சியில் இருந்து நீக்கியது தவறு. இது தொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடருவேன் என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவது குறித்து கோபிசெட்டிபாளையத்தில் தனது இல்லத்தில் சட்ட வல்லுநர்களுடன் செங்கோட்டையன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். ஓ.பன்னீர் செல்வம், டி.டி.வி.தினகரன், சசிகலா மற்றும் ஆதரவு மாவட்ட செயலாளர்களுடன் நவம்பர் 5-ந்தேதிக்கு பிறகு ஆலோசனை நடத்த உள்ளார். கொடநாடு வழக்கை 3 நாட்களுக்கு ஒரு முறை விசாரிக்க வேண்டுமென நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

# மெக்சிகோவில் சூப்பர் மார்க்கெட்டில் பயங்கர தீ விபத்து: 23 பேர் உயிரிழப்பு

**மெக்சிகோ சிட்டி, நவ. 03-**

மெக்சிகோவில் சூப்பர் மார்க்கெட்டில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 23 பேர் பலியாகினர்.

வடமேற்கு மெக்சிகோவில் சோனோரா மாகாண தலைநகரான ஹெர்மோசில்லோவில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் குழந்தைகள் உள்பட 23 பேர் பலியாகினர். மேலும் 11 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவத்து மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.


புகையால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பலர் பலியானதாகக் கூறப்படுகிறது.பழுதடைந்த மின்மாற்றி வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இருப்பினும், தீ விபத்துக்கான காரணம் குறித்து தீயணைப்புத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே இந்த சம்பவத்தில் பலியானோரின் குடும்பங்களுக்கு மெக்சிகோ அதிபர் கிளாடியா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் 2.0 நடவடிக்கை:

# பாகிஸ்தானுக்கு இந்திய ராணுவ தளபதி எச்சரிக்கை

டெல்லி, நவ. 03-

ஆபரேஷன் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு தயார் என்று ராணுவ தளபதி உபேந்திர திவேதி பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்.



பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த மே மாதம் பாகிஸ்தான் மீது ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. பாகிஸ்தான், ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை பாதுகாப்பு படையினர் அழித்தனர். இந்த நிலையில் ஆபரேஷன் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு தயார் என்று ராணுவ தளபதி உபேந்திர திவேதி பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது:- பாகிஸ்தான் ஏதேனும் கோமாளித்தனமான செயலுக்கு முயன்றால் வலுவான பதிலடியை எதிர்கொள்ள நேரிடும். ஆயுதப்படைகள் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு முழுமையாக தயாராக இருக்கிறது. பயங்கரவாதிகள் வாழ்ந்த இடங்களை மட்டுமே குறிவைத்தோம். பொதுமக்கள் பகுதிகள் அல்லது ராணுவ நிலைகளை தாக்கவில்லை.

நாங்கள் விரும்பியதை அடைந்தோம், நாங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்ல என்பதை பாகிஸ்தானுக்குப் புரிய வைத்தோம். நாங்கள் தர்மயுத்தத்தை பின்பற்றுபவர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# உத்தரகாண்ட் சட்டசபையில் இன்று ஜனாதிபதி திரௌபதி முர்மு உரை

டெராடூன், நவ. 03-

ஜனாதிபதி திரௌபதி முர்மு 3 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று உத்தரகாண்ட் சென்றார். டெராடூன் விமான நிலையம் சென்ற ஜனாதிபதி திரௌபதி முர்முவை உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, கவர்னர் குர்மித் சிங் வரவேற்றனர். அதன்பின்னர் ஹரித்துவார் சென்ற திரௌபதி முர்மு அங்குள்ள பதஞ்சலி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுள்ளார்.

இதனிடையே, பயணத்தின் 2வது நாளான இன்று உத்தரகாண்ட் சட்டசபையில் ஜனாதிபதி திரௌபதி முர்மு சிறப்பு உரையாற்றுகிறார். அதே நாளில், நைனிடால் ராஜ்பவனின் 125-வது ஆண்டு தின நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். இதைத்தொடர்ந்து 4ம் தேதி கரோலி பாபா ஆசிரமத்திற்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு செல்கிறார். பின்னர் நைனிடாலில் உள்ள குமான் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட பிறகு ஜனாதிபதி டெல்லி திரும்புகிறார்.

கோவில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த

# 2 குழந்தைகளின் பெற்றோருக்கு நிதியுதவி அறிவித்தார் முதல்வர்

சென்னை, நவ. 03-



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், அயனம்பாக்கம் கிராமத்தில் கோவில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த 2 குழந்தைகளின் பெற்றோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், அயனம்பாக்கம் கிராமம், மகாத்மா காந்தி நகர், பொன்னியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் தமீம் அன்சாரி (எ) தமிழரசு மற்றும் அவரது மனைவி வசந்தா ஆகிய இருவரும் நேற்று (01.11.2025 நண்பகல் 12.00 மணியளவில் பணி நிமித்தம் காரணமாக தங்களது இரண்டு குழந்தைகள் ரியாஸ் (வயது 5) மற்றும் ரிஸ்வான் (வயது 3) ஆகிய இருவரையும் வீட்டில் விட்டு வெளியில் சென்ற நிலையில் மேற்படி குழந்தைகள் இருவரும் அருகிலுள்ள பொன்னியம்மன் கோவில் குளத்தில் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் சிறப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு:

# முதல்வர் மம்தா தலைமையில் நாளை போராட்டம் அறிவிப்பு

கொல்கத்தா, நவ. 03-

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக மம்தா தலைமையில் நாளை கொல்கத்தாவில் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரை தொடர்ந்து 2-ம் கட்டமாக தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) பணிக்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட்டது. இந்த 4 மாநிலங்களிலும் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்கிறது.

எஸ்.ஐ.ஆருக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்த நிலையில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக மேற்கு வங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தலைமையில் வருகிற 4-ந்தேதி கொல்கத்தாவில் போராட்டம் நடக்கிறது. கட்சியின் பொதுச் செயலாளரான அபிஷேக் பானர்ஜியும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிறார்.

இதற்கிடையே மேற்கு வங்காள தலைமை தேர்தல் அதிகாரிக்கு திரிணாமுல் காங்கிரஸ் புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.மேற்கு வங்காள சட்டசபை எதிர்க்கட்சி தலைவரும், பா.ஜ.க தலைவருமான சுவேந்து, பூத் நிலை அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுப்பதாக குற்றம் சாட்டியுள்ளது.

கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக

# அஜித் தெரிவித்தது அவரது சொந்த கருத்து: துணை முதல்வர் உதயநிதி

சென்னை, நவ. 03-



கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக நடிகர் அஜித் தெரிவித்த கருத்து குறித்த கேள்விக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை தீவுத்திடலில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், கரூர் சம்பவம் குறித்து முதல்வர் தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார். நானும் பேட்டி அளித்திருக்கிறேன். நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதால் அதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை. உண்மையாக யார் பேட்டி கொடுக்க வேண்டுமோ, அவர் இதுவரை பேசவில்லை.

அவரிடம்தான் கேட்க வேண்டும். அஜித் பேட்டியை முழுமையாக பார்க்கவில்லை, அது அவரது சொந்த கருத்து. எந்த கருத்தானாலும் பாராட்டக்குரியது. தங்களுக்கு பாதகமாக இருக்கக் கூடிய வாக்குகளை நீக்கும் பணிகளில் பாஜக ஈடுபடுகிறது. குறிப்பிப்பாக, தேர்தல் நடக்கும் இடங்களில் தங்களுக்கு சாதகமாக உள்ளதை வைத்து பாதகமான பணிகளில் பாஜக ஈடுபடுகிறது.

பிகாரில் சிறப்பு திருத்தம் மூலம் என்னென்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தான் நிரந்தர பொதுச்செயலாளராக இருக்க வேண்டும் என நினைக்கிறார்.

அமைச்சர் நேரு மீதான குற்றச்சாட்டு பழிவாங்கும் நோக்கத்தோடு சுமத்தப்பட்டது. நாங்கள் அதனை சட்டப்படி சந்திப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

பீகாரில் ஜன் சுராஜ் கட்சி தொண்டர் படுகொலை:

# ஆளும் கட்சி முன்னாள் எம்.எல்.ஏ. கைது

பாட்னா, நவ. 03-





பீகாரில் ஜன் சுராஜ் கட்சி தொண்டர் படுகொலை சம்பவத்தில் ஆளும் ஐக்கிய ஜனதா தள கட்சியின் வேட்பாளர் ஆனந்த் குமார் சிங் கைது செய்யப்பட்டார்.

பீகார் மாநில சட்டசபைக்கு நவம்பர் 6, 11 ஆகிய தேதிகளில் இரு கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கும், இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 14-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

ஜன் சுராஜ் கட்சியைச் சேர்ந்த பிரியதர்ஷி பியூஷ் மொகமா தொகுதிக்கான வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். அவருக்காக வாக்குகள் சேகரிக்க பிரசாரத்தில் ஈடுபடும் பணியில் துலார்சந்த் யாதவ் (75) ஈடுபட்டார். இவர் ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சியின் முன்னாள் மூத்த தொண்டர் மற்றும் உள்ளூர் தலைவராகவும் இருந்துள்ளார்.

அரசியல் குழுக்கள் இடையே நடந்த மோதலில் துலார்சந்த் படுகொலை செய்யப்பட்டார். விசாரணையில், முன்னாள் எம்.எல்.ஏ.வும், ஆளும் ஐக்கிய ஜனதா தள கட்சியின் வேட்பாளர் ஆனந்த் குமார் சிங் நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

மேலும், அவருடைய உதவியாளர்கள் மணிகாந்த் தாக்குர் மற்றும் ரஞ்சித் ராம் ஆகிய 2 பேரும் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய பாட்னா போலீஸ் அதிகாரி கார்த்திகேய சர்மா, கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது என தெரிவித்தார்.

சபரிமலை மண்டல பூஜை:

# சென்னையில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கம்

சென்னை, நவ. 03-

சபரிமலை மண்டல பூஜையையொட்டி சென்னை எழும்பூர், சென்ட்ரல் ரயில் நிலையங்களில் இருந்து கொல்லத்திற்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

சென்னை எழும்பூரிலிருந்து கொல்லத்திற்கு நவம்பர் 14 முதல் ஜனவரி 16 வரை 2 மாதங்களுக்கு வாராந்திர சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும் இந்த ரயிலானது வாரந்தோறும் வெள்ளி இரவு 11.55 மணிக்கு எழும்பூரில் இருந்து புறப்பட்டு மறுநாள் மாலை 4.30 மணிக்கு கொல்லத்தை சென்றடையும் என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

மறுமார்க்கத்தில் சனிக்கிழமை இரவு 7.35 மணிக்கு புறப்படும் ரயில் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு மீண்டும் எழும்பூரை வந்தடைகிறது. இதேபோல் சென்னை சென்ட்ரலில் கொல்லத்திற்கு நவம்பர் 16 முதல் ஜனவரி 18 வரை 2 மாதங்களுக்கு வாராந்திர சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

இந்த ரயிலானது வாரந்தோறும் ஞாயிறு சென்னை சென்ட்ரலில் இருந்து இரவு 11.50 மணிக்கு புறப்பட்டு மறுநாள் 4.30 மணிக்கு கொல்லம் சென்றடைகிறது. பின்னர் மறுமார்க்கத்தில் கொல்லத்திலிருந்து திங்கள் 6.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்தடைகிறது.

இதற்கான முன்பதிவு நவ.4ஆம் தேதி(செவ்வாய்க்கிழமை) காலை 08.00 மணிக்கு தொடங்குகிறது. கேரளத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் மண்டல பூஜை, மகர விளக்கு பூஜையை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் விரதம் இருந்து, இருமுடி கட்டி ஐயப்ப சுவாமியை தரிசனம் செய்வதற்காக வருகை தருவார்கள்.

அவ்வாறு வரும் பக்தர்களின் வசதிக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் தேவசம்போர்டு வாரியம் பல்வேறு முன்னேற்பாடுகளை செய்து வருகிறது. இந்த ஆண்டு மண்டல பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை, நவம்பர் 16 ஆம் தேதி திறந்து, டிசம்பர் 27 ஆம் தேதி அடைக்கப்படுகிறது.

பீகார் சட்டப்பேரவை தேர்தல்:

# தே.ஜ. கூட்டணி மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்கும்: அமித்ஷா பேட்டி

பீகார், நவ. 03-

பீகார் சட்டசபை தேர்தலில் தே.ஜ. கூட்டணி வெற்றிப்பெற்று மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

பீகாரில் உள்ள 243 சட்டமன்ற தொகுதிகளுக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. வருகிற 6-ந்தேதி 121 தொகுதிகளுக்கு முதல் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மீதி உள்ள 122 இடங்களுக்கு 2-ம் கட்டமாக வருகிற 11-ந்தேதி தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடைபெறுகிறது. தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஐக்கிய ஜனதா தளம் கட்சி தலைவரும், முதலமைச்சருமான நிதிஷ்குமார் உள்ளிட்டோர் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், உள்துறை அமைச்சர் அமித்ஷா, பீகார் சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 160 தொகுதிகளில் வெற்றி பெறும் என கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:- நாட்டின் மிகவும் அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெற்ற மாநிலங்களில் பீகாரும் ஒன்று. கடந்த 20 ஆண்டுகளில் பீகார் அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்கள் கண்டிருக்கிறார்கள்.

லாலு பிரசாத், ராப்ரி தேவி ஆகியோர் பீகாரை பின்னோக்கி இழுத்து சென்றனர். ஆனால் இன்று அது எங்கே இருக்கிறது என்று பாருங்கள். நிதிஷ்குமார் அரசாங்கத்தின் கீழ் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு மேம்பட்டுள்ளது என்று இளைஞர்கள் கூறி வருகின்றனர்.

இதுவே முன்னேற்றத்திற்கு அடிப்படை என்று அவர்கள் கூறுவார்கள். கங்கை நதியின் கீழ் 4 பாலங்களை கட்டினோம். இன்னும் 10 பாலங்கள் கட்டுமானத்தில் இருக்கின்றன. இது சாத்தியமாகும் என்று யாரும் நினைக்கவில்லை. கடந்த ஆட்சியில் விவாதங்கள், கொள்ளை, கொலை, வழிப்பறி பற்றியதாக இருந்தது. ஆனால் இன்று விவாதங்கள் முன்னேற்றம் பற்றி மாறியுள்ளது. வருகிற சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 160 தொகுதிகளில் வெற்றி பெற்று மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்கும்.

நாங்கள் பீகாரில் நிதிஷ்குமார் தலைமையில் செல்வதை பல முறை தெளிவுப்படுத்தினோம். அவரே முதலமைச்சர் ஆவார். வெற்றிக்கு பிறகு அரசியலமைப்பு சட்டப்படி நாங்கள் செயல்படுவோம். எங்கள் பலத்தை பற்றி நினைக்காமல் கூட்டணி கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதே பா.ஜ.க.,-வின் கொள்கை.

குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என தேஜஸ்வி யாதவ் கூறியுள்ளார். மாநிலத்தில் 2.8 கோடி குடும்பங்கள் உள்ளன. புதிதாக 2 கோடிக்கும் அதிகமான வேலை கொடுக்க வேண்டுமானால் பி, சி, டி பிரிவுகளில் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். அதற்கு சராசரியாக ரூ.39 ஆயிரம் சம்பளம் என நிர்ணயித்து கொண்டாலும் மொத்தம் ரூ.12.85 லட்சம் கோடி தேவை. இது பீகாரின் பட்ஜெட்டை விட 4 மடங்கு அதிகமாகும். சாத்தியமில்லாத இந்த வாக்குறுதியை தேஜஸ்விக்கு ராகுலும், லாலுவுதான் அளித்திருப்பார்கள் என்றார்.

# பா.ஜ.க.-தேர்தல் ஆணையம் இணைந்து நவீன முறையில் வாக்கை திருடுகிறது

## செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை, நவ. 03-

பா.ஜ.க. - தேர்தல் ஆணையம் இணைந்து நவீன முறையில் வாக்குத் திருட்டை செயல்படுத்துகிறது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

சென்னை தி.நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்றது. 64 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 21 கட்சிகள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்நிலையில், அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:- குறைந்தபட்ச நியாயம் கூட இல்லாமல் தேர்தல் ஆணையம் மோசடியாக செயல்படுகிறது. பா.ஜ.க.வும் தேர்தல் ஆணையமும் இணைந்து நவீன முறையில் வாக்குத் திருட்டை செயல்படுத்துகிறது. நியாயமான முறையில் வெற்றி பெற முடியாது என்பதால் தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி குறுக்கு வழியில் வெற்றி பெற பா.ஜ.க. முயற்சிக்கிறது. குடியுரிமை சான்றிதழை கொடு என்றால் என்னால் கூட தற்போது கொடுக்க முடியாது. இவ்வாறு கூறினார்.

# லாலு ஹாலோவீன் கொண்டாட்டம்: பாரதிய ஜனதா கட்சி கடும் விமர்சனம்

புதுடெல்லி, நவ. 03-

உ.பி.யில் நடந்த மகா கும்பமேளா நிகழ்வை ‘அர்த்தமற்றது’ என்று லாலு விமர்சித்ததை சுட்டிக்காட்டி லாலுவின் ‘ஹாலோவீன்’ கொண்டாட்டத்தை சாடியுள்ளது பா.ஜ.க.. பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் நவம்பர் 6 மற்றும் 11 என இரு தினங்களில் நடக்கவிருக்கும் சூழலில் லாலுவின் ‘ஹாலோவீன்’ கொண்டாட்டமும், பா.ஜ.க.வின் விமர்சனமும் கவனம் பெற்றுள்ளது.

லாலு யாதவின் மகள் ரோஹினி ஆச்சார்யா, தனது பிள்ளைகள் ஹாலோவீன் உடைகளில் இருக்கும் படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்திருந்தார். அதில் லாலு பிரசாத் யாதவும் இருந்தார். ரோஹினி அந்தப் படத்துடன் அனைவருக்கும் ஹாலோவீன் திருவிழா வாழ்த்துகள் என்று பதிவிட்டிருந்தார். இதனை தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பா.ஜ.க. விவசாய அணி, பிரிட்டிஷ் திருவிழாவைக் கொண்டாடுவதில் லாலு பிரசாத் யாதவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தது.

“பீகார் மக்களே, மறந்துவிடாதீர்கள். இதே லாலு பிரசாத் யாதவ் தான் சில நாட்களுக்கு முன்னர் மகா கும்ப மேளா என்ற மத நம்பிக்கை சார்ந்த விழாவை அர்த்தமற்றது என்றார். இப்போது பிரிட்டிஷ் ஹாலோவீன் திருவிழாவைக் கொண்டாடுகிறார். நம்பிக்கையை இழிவுபடுத்தும் யாருக்கும் பீகாரிக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.” என்று அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.ஐ.ஆர்.குறித்து மக்களுக்கு விளக்கமளிக்க

# தமிழ்நாடு முழுவதும் த.வெ.க. சார்பில் விழிப்புணர்வு கருத்தரங்கம், முகாம்கள்

## விஜய் பரபரப்பு அறிக்கை



சென்னை, நவ. 03-

சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்து மக்களுக்குத் தெளிவாக விளக்குவதற்காக, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கம் மற்றும் தமிழகம் முழுவதும் முகாம்கள் நடத்தப்படும் என்று அனைத்துக்கட்சி கூட்டத்தை புறக்கணித்த நிலையில் த.வெ.க. தலைவர் விஜய் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக தேர்தல் நெருக்கத்தில் தி.மு.க.வின் அனைத்துக் கட்சி கூட்டம் மக்களை திசை திருப்பும் கபட நாடக அரசியலே ஆகும் என த.வெ.க. தலைவர் விஜய் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த பணிகள் வரும் 4ம் தேதி தொடங்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் நேற்று (நவம்பர் 2) தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இந்த கூட்டத்தை நடிகர் விஜய்யின் த.வெ.க. புறக்கணித்தது. மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கு விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்பட இருப்பதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே, பிஹார் மாநிலத்தில் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்த அறிவிப்பு வெளியானபோதே, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அதைக் கடுமையாக எதிர்த்து, அதன் உள்நோக்கம் குறித்து எச்சரித்தோம்.

அப்போது எச்சரித்தது போலவே பிஹாரில் லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. குறிப்பாக இந்தச் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் மூலம் மதச் சிறுபான்மையினர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட வாக்குகள் குறிவைத்து நீக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. மேலும், வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தம் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது.

முதல் கட்டச் சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்த தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படாத நிலையில், இரண்டாம் கட்டத் திருத்தத்தை மேற்கொள்வது எந்த வகையில் சரியான நகர்வாய் இருக்க முடியும்? தமிழ்நாட்டில் மொத்தம் 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் பெயரையும் வெறும் 30 நாட்களில் எப்படிச் சரிபார்க்க முடியும்?

இந்த வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் வாயிலாக, பீகாரில் நடைபெற்றதைப் போல் தமிழ்நாட்டிலும் சிறுபான்மையினர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட வாக்குகள் குறிவைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முழக்கமிட்டு வருகின்றன. அப்படி நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? தேசியக் குடிமக்கள் பதிவேட்டு முறை நடைமுறைப் படுத்தப்படும் அசாமில் மட்டும் தனியாகச் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பும் இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே உள்ளது. எனவே சிறப்புத் தீவிரத் திருத்தம் என்கிற குழப்பமான நடைமுறையை விடுத்து, ஏற்கெனவே இருக்கும் நடைமுறையே தொடர வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்துகிறது.

சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக ஏற்கெனவே தமிழ்நாட்டில் முதல் குரலாக ஓங்கி ஒலித்தது தமிழக வெற்றிக் கழகத்தின் குரல்தான். இதை நாடும் நாட்டு மக்களும் நன்றாகவே அறிவர். நாம் முதன்முதலாகக் குரல் எழுப்பிய அந்த நேரத்தில் தி.மு.க. தூங்கிக்கொண்டிருந்ததா?

மத்திய பா.ஜ.க.வுடன் மறைமுக உறவுக்காரராக இருந்ததால் மறதி மயக்கத்தில் இருந்ததா? ஏதோ இப்போது மட்டும் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக முதன்முதலாக விழித்துக்கொண்டது போலவும், தான் மட்டுமே ஜனநாயக உரிமையின் ஒற்றைப் பாதுகாவலன் போலவும் கபட நாடக வேடத்தைப் பூண்டுள்ளது. அப்பட்டமான ஏமாற்று வேலை. இந்த விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் என்ற பெயரில் கூட்டணிக் கட்சிகளை ஏமாற்றுவதைப் போல எல்லோரையும் ஏமாற்றி விடலாம் என்று தி.மு.க. நினைக்கிறதா?

ஆகவே, சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்து மக்களுக்குத் தெளிவாக விளக்குவதற்காக, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கம் மற்றும் தமிழகம் முழுவதும் முகாம்கள் நடத்தப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



எஸ்.ஐ.ஆர். செயல்முறை தமிழகத்தில் மட்டும் அல்ல, மொத்தம் 12 மாநிலங்களில் நடைபெறுகிறது. தி.மு.க. இந்த அரசியலமைப்பு சார்ந்த சட்டபூர்வ செயல்முறையை குழப்ப வேண்டாம். எஸ்.ஐ.ஆர். கண்டு தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஏன் பயப்படுகின்றன? மடியில் கனம் இருந்தால் தானே பயப்பட வேண்டும்.

- தமிழிசை



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழகத்தின் உரிமைக்கு பேராபத்து விளைவிக்கும். ஜனநாயகத்தின் ஆணி வேரையே அறுக்கும் செயலில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. எஸ்.ஐ.ஆர். காரணமாக வடமாநிலத்தைச் சேர்ந்த 75 லட்சம் பேர் தமிழகத்தில் வாக்களிக்கும் அபாயகரமான நிலை ஏற்படலாம்.

- வைகோ



சிறப்பு தீவிர திருத்தம் என்பது குடியுரிமை மீது நடத்தப்படும் தாக்குதல் ஆகும்.வெளி மாநிலத்தவரை தமிழ்நாடு வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணிகளை முறியடிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. தி.மு.க.வின் நிலைப்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து செயல்பட வேண்டியது நமது கடமை.

- திருமாவளவன்



பா.ஜ.க.வை எதிர்க்க பயந்தவர்கள் அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு வராதவர்களை பற்றி கவலைப்பட தேவையில்லை. வந்தவர்களை வரவேற்கிறோம். அவர்களுக்கு ஜனநாயக உரிமை இருக்கிறது. அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு வந்தவர்கள் வீரர்கள். வராதவர்கள் பயந்தாங்கொள்ளிகள்.

- ஆர்.எஸ்.பாரதி



சென்னைராதாகிருஷ்ணன்நகர்சட்டமன்றதொகுதிமற்றும்பெரம்பூர்சட்டமன்றதொகுதியின் வாக்குச்சாவடி நிலை அலுவலவர்களுக்கான பயிற்சி நடைபெற்றது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் அஜாக்ஸ்பரமசிவம் தலைமையில்12 வது கிழக்கு மற்றும் மேற்கு வட்ட பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கூட்டம் நடை பெற்றது.கூட்டத்தை வட்ட செயலாளர்கள் எஸ்.மா.அரசு காலடிபேட்டை எஸ். முரளி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.இந்த கூட்டத்தில் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் எஸ்.மாரி சுந்தர் ஜமுனாராணி மதன் இன்பநாதன் கார்த்திக் மணிமாறன் கலந்துகொண்டனர்.

# சென்னை கொளத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகரில் அடிப்படை வசதிகள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,நவ.03**

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-65-க்குட்பட்ட சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

சென்னைப் வளர்ச்சிக் குழும அமைச்சர்(ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமானபி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

கொளத்தூர் தொகுதி மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் தங்கு தடையின்றி குடிநீர், மின்சாரம் உள்ளிட்டவைகள் மேற்கொண்டு சிறப்புமிக்க தொகுதியாக திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சி தான்.

கொளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பல்வேறு பகுதிகள் அரசுக்கு சொந்தமான பல இடங்களில் 30 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் இல்லை என்ற குறைகள் முதல்வர் கவனத்திற்கு சென்றவுடன், தற்போது சிவசக்தி நகர், கண்ணகி நகர், அண்ணா நகர், மகாத்மா காந்தி நகர், வினோபா நகர் ஆகிய பகுதிகளில் பிரச்சனைகள் குறித்து துறை சார்ந்த உயர் அதிகாரியுடன் நேரடியாக ஆய்வுகள் மேற்கொண்டு பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இன்றைக்கு கொளத்தூர் பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் இரண்டு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டோம்.

பொதுமக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம். தீர்க்கப்படாமல் இருக்கின்ற பல பிரச்சனைகளை ஒரு முடிவினை முதல்வர் எடுப்பார்கள். கொளத்தூர் தொகுதி பொருத்தவரை முழுமையாக அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்ட தொகுதியாக மாற்றுவது முதலமைச்சருடைய கனவு. இந்த கனவு ஏற்ற வகையில் குடிநீர், கழிவுநீர், தடையில்லா மின்சாரம், இரு மண மண்டபம் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக கொளத்தூர் தொகுதியில் 13 பள்ளிகள் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். சுமார் 11 பள்ளிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. புதிதாக இரண்டு பள்ளிகள் சீனிவாசன் நகர், கம்பன் நகர் வருகின்ற 2026 ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்படும். குடிநீர் வராத சில பகுதிகளில் 140 கிலோ மீட்டர் அளவிற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்த ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையர்ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர். கௌஷிக், , மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், சென்னைக் குடிநீர் தலைமைப் பொறியாளர். இராதாகிருஷ்ணன், மின்சார வாரிய கண்காணிப்புப் பொறியாளர் (வடக்கு) பழநிவேலன், மாமன்ற உறுப்பினர். நாகராஜன், வருவாய்த்துறை, மின்சாரத்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கோட்டூர்புரம் பகுதியில் 7 சவரன் தங்க நகைகள் உரியரிடம் ஒப்படைப்பு

**சென்னை நவ 03-**

கோட்டூர்புரம் பகுதியில் கேட்பாரற்று கிடந்த 7 சவரன் தங்கநகைளை கண்டெடுத்த நபர் நாணயத்துடன் காவல்துறையினரிடம் ஒப்படைத்ததின் பேரில் விசாரணை செய்து தவறவிட்ட உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்னை, கோட்டூர்புரம், பாண்டிச்சேரி ரோட்டில் சிவகுமார் என்பவர் வாடகை வீட்டில் கடந்த 3 ஆண்டுகளாக வசித்து வருகிறார். இவர் நந்தம்பாக்கம் தனியார் யில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 31 ந் தேதி அன்று மாலை மணியளவில் அவரது வீட்டின் முன்பு ஒரு பிளாஸ்டிக் கவர் கீழே கிடந்ததாகவும் அதனை எடுத்துப் பார்த்த போது, அதில் உள்ளே தங்க நெக்ஸஸ்-1, தங்க பிராஸ்லைட் -1, தங்க சம்க்கிலி -1 மற்றும் சின்ன தங்க சங்கிலி -1 ஆகிய நான்கு நகைகளும் ஒரு நீல நிற பேப்பரில் மடித்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அதனை எடுத்த சிவகுமார் அருகில் கேட்டு பார்க்க யாரும் உரிமை கோராததால் இரவு சிவக்குமார் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்ததன் பேரில், கோட்டூர்புரம் காவல் நிலைய ரோந்து வாகன போலீசாரிடம் அவ்விடத்திலே கண்டெடுத்த நகைகளை ஒப்படைத்து உரியவரிடம் ஒப்படைக்க கேட்டுக்கொண்டார்.உடனடியாக காவல் கட்டுப்பாட்டு அறை மூலமாக காவல் நிலைய ரோந்து அதிகாரிகள் மூலம் தகவல்கள் பரிமாறப்பட்டு உரிமையாளர் பற்றியும், ஏதேனும் புகார்கள் குறித்தும் விசாரித்து வந்த நிலையில் நேற்று நகையை தவறவிட்ட அதே பகுதியைச்சேர்ந்த கலை மற்றும் அவரது சகோதரி மகன் பிரதீப் @ ஜான், என்பவருடன் காவல் நிலையம் வந்து திருமண ஏற்பாட்டிற்காக நகைகள் பெயர் பதித்து எடுத்து சென்ற நிலையில் தவறி கீழே விழுந்ததாகவும், பல்வேறு இடங்களில் தேடிப்பார்த்து கிடைக்காததினால் பாண்டிச்சேரி சாலை வழியாக கோட்டூர்புரம் வந்த போது விழுந்திருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் காவல் நிலையம் வந்து புகார் தெரிவித்தனர். மேலும் மேற்கண்ட நகைகள் விபரங்கள் காவல் நிலையம் மூலம் அப்பகுதியில் வசிப்பவர்களுக்கு தெரிவித்திருந்ததால், தேடி வந்த உரிமையாளர் பிரதீப் (எ) ஜான் மற்றும் அவரது சித்தி கலை என்பருக்கு தெரியவந்துள்ளது. மேற்கண்ட நகைகள் உரிய விசாரணைக்குப்பின்னர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட தங்கச்செயின் டாலரில் ஜான் என பொறிக்கப்பட்டிருந்ததை வைத்து உறுதிப்படுத்தியும், பிரதீப் (எ) ஜான் அவரது சித்தி கலை என்பவரை பாண்டிச்சேரி ரோட்டில் உள்ள வீட்டிற்கு வந்த பார்த்து திரும்பி சென்றபோது தவறவிட்டது உறுதிசெய்யப்பட்டதை அறிந்து முறையே கோட்டூர்புரம் காவல் ஆய்வாளரால் உரிமையாளர் பிரதீப் (எ) ஜான் என்பவரிடம் சுமார் ரூ.7 லட்சம் மதிப்புள்ள 57 கிராம் தங்க நகைகளை பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது

நாணயத்துடன் ஒப்படைத்த பாண்டிச்சேரி ரோட்டை சேர்ந்த சிவக்குமாருக்கும் முறையான விசாரணை மேற்கொண்டு தவறவிட்ட உரிமையாளரிடம் நகைகளை ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுத்த காவல் துறையினருக்கும் தங்கநகைகளை பெற்றுக் கொண்ட பிரதீப் (எ) ஜான் குடும்பத்தினர் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

# திருமங்கலம் பகுதியில் வீட்டின் பூட்டை உடைத்து திருடிய இருவர் கைது

**சென்னை நவ 03-**

சென்னை, அண்ணாநகர், மேற்கு விரிவாக்கம், 9வது தெருவில் பாலமுகுந்தன், என்பவர் வசித்து வருகிறார். இவருக்கு சொந்தமாக அதே பகுதியில் உள்ள மற்றொரு வீட்டை கடந்த 3 வருடங்களாக பூட்டி வைத்துள்ளார். பாலமுகுந்தன் அவ்வப்போது அந்த வீட்டை பார்க்க செல்வது வழக்கம், அதன்படி பாலமுகுந்தன் மேற்படி வீட்டிற்கு சென்று பார்த்த போது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த பணம், வெள்ளி டம்லர் மற்றும் நாணயங்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து பாலமுகுந்தன் திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

V-5 திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.ஆகாஷ், 2.ரித்திக், ஆகிய இருவரை கைது செய்தனர். மேற்படி வழக்கில் தொடர்புடைய 1 இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து சில்லறை நாணயங்கள் உட்பட பணம் ரூ.17,370/-,1 வெள்ளி டம்ளர், 2 செல்போன்கள், 1அரிவாள் மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய ஒரு இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஆகாஷ் மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளதும், இவர் அதே பகுதியில் ஒரு பூட்டிய வீட்டை உடைத்து சில்வர் குடிநீர் குழாய்களை திருடியதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இளஞ்சிறார் சிறார் நீதிகுழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 59 டிஎஸ்பிக்கள் பணியிடமாற்றம்: டிஜிபி (பொறுப்பு) வெங்கடராமன் உத்தரவு

**சென்னை நவ 03-**

தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் (பொறுப்பு) வெங்கடராமன் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது;

சென்னை மாநில சைபர் கமாண்ட் மையம் டிஎஸ்பியாக இருந்த இலக்கியா வேலூர் போதை பொருள் தடுப்பு பிரிவு சிஐடி டிஎஸ்பியாகவும் விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் டிஎஸ்பியாக இருந்த உமாதேவி கடலூர் டிஎஸ்பியாகவும் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னாமராவதி டிஎஸ்பியாக இருந்த கண்ணன் சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை டிஎஸ்பியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல், கன்னியாகுமரி மாவட்டம் நில அபகரிப்பு சிறப்பு பிரிவு டிஎஸ்பியாக இருந்த கண்ணதாசன் திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் உதவி கமிஷனராகவும் புதுக்கோட்டை மாவட்டம் குற்றஆவணம் காப்பகம் டிஎஸ்பியாக இருந்த குமார், சென்னை தலைமையிடம் பொருளாதார குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி டிஎஸ்பியாக இருந்த சபரிநாதன் சேலம் மாவட்டம் வாழப்பாடி டிஎஸ்பியாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# திருவல்லிக்கேணி பகுதியில் கார் பைனான்ஸ் உரிமையாளரை கடத்திய 3 பேர் கைது

**சென்னை நவ 03-**

சென்னை, நுங்கம்பாக்கம், 2வது தெருவில் வசித்து வரும் செல்வகண்ணன், என்பவர் அவரது வீட்டிலேயே பைனான்ஸ் அலுவலகம் வைத்து நடத்தி வருகிறார். இவருக்கு அறிமுகமான சரவணன் (எ) லிங்கசரவணன் என்பவர் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு அவரது காரை மேற்படி செல்வகண்ணனிடம் அடமானத்திற்காக வைத்து, அதற்கு பதிலாக பணம் ரூ.2 லட்சம் வேண்டும் என்று கேட்டுள்ளார். செல்வகண்ணன் அந்த காரை அவரது நண்பரான பென்னி என்பவரிடமிருந்து கொடுத்து, அதற்கு பதிலாக பணம் ரூ.2 லட்சம் பெற்று, அந்த பணத்தை மேற்படி சரவணன் (எ) லிங்கசரவணனிடம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 3 மாதங்களாக வட்டி பணம் கட்டாததால் பென்னி என்பவர் சரவணன் (எ) லிங்கசரவணனின் காரை வேறொருவருக்கு விற்று விட்டார். இத்தகவலை அறிந்து கொண்ட சரவணன் (எ) லிங்கசரவணன், செல்வகண்ணன் மீது திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக பொய்யான தகவலை கூறி, நேற்று முன் தினம் மதியம், திருவல்லிக்கேணி காவல் நிலையத்திற்கு வருமாறு கூறியுள்ளார். பின்னர் சமாதானமாக பேசி முடித்து கொள்ளலாம் என திருவல்லிக்கேணி, தனியார் பாருக்கு செல்வகண்ணனை வரவழைத்து அங்கிருந்து சரவணன் (எ) லிங்கசரவணன் மற்றும் அவருடன் சிலர் சேர்ந்து, செல்வகண்ணனை காரில் கடத்திச் சென்று, அயோத்திகுப்பத்தில் இறங்கி, பணம் ரூ.5 லட்சம் கொடுத்தால் தான் உன்னை விடுவேன் என்று மிரட்டி தகாத வார்த்தைகள் பேசி, கட்டையால் தாக்கியுள்ளனர். அப்போது செல்வகண்ணன் சத்தம்போடவே, அருகிலிருந்த பொதுமக்கள் கூடவே, சரவணன் (எ) லிங்கசரவணன் மற்றும் அவரது நண்பர்கள் அங்கிருந்து காரில் தப்பிச் சென்றனர். இது குறித்து பாதிக்கப்பட்ட செல்வகண்ணன், திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சரவணன் (எ) லிங்கசரவணன், 2.சிவானந்தம், 3.முரளி, ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கார் மற்றும் கட்டை பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படித்தி சிறையில் அடைத்தனர்.



கும்மிடிப்பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பேங்க் ஆப் இந்தியா சென்னை மண்டலம் கும்மிடிப்பூண்டி சார்பாக ஊழல் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையே நடத்தினர்

# ஜெ.ஜெ நகர் பகுதியில் ஆட்டோ ஓட்டுநரிடம் வழிப்பறி: இருவர் கைது

**சென்னை நவ 03**

சென்னை, முகப்பேர் கிழக்கு, நக்கீரன் சாலையில் வசித்து வரும் சேகர், என்பவர் வாடகை ஆட்டோ ஓட்டுநராக உள்ளார், இவர் கடந்த செப் 20.ந் தேதி அன்று அவரது ஆட்டோவில் கோல்டன் ஜார்ஜ் நகர், பழைய பாலம் அருகே சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த 3 நபர்கள் மேற்படி ஆட்டோவை வழிமறித்து ஆட்டோ ஓட்டுநர் சேகரை கையால் தாக்கி, கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்து பணம் ரூ.700/- பறித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். இது குறித்து சேகர் ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.வினோத்குமார், 2.சுலைமான், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி வினோத்குமார் என்பவர் ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது 12 குற்ற வழக்குகளும், எதிரி சுலைமான் மீது 10 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.



சென்னை மயிலாப்பூர் கபாலிசுவரர் கோயிலில் பக்தர்கள் அருகிலுள்ள திருக்கோயில்கள் குறித்து விவரம் அறிந்து கொள்ளும் வகையில் தொடு திரை வசதியுடன் கூடிய தகவல் வசதியினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இதில் மயிலை த.வேலு எம்எல்ஏ, அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஷ்ர்தர், கூடுதல் ஆணையர்கள் துரை.ரவிச்சந்திரன், கல்யாணி, சிறப்பு பணி அலுவலர் லட்சுமணன் கலந்து கொண்டனர்.



சென்னையில் தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தும் பணிநடைபெறும்காட்சி.

# சென்னையில் இதுவரை 1,00,347 தெரு நாய்களுக்கு வெறி நாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

**சென்னை,நவ.03**

சென்னை மாநகராட்சியின் 2025-2026 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, அறிவிப்பு எண்:20ன் படி வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும் அனைத்து தெரு நாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (மற்றும் அக, புற ஒட்டுண்ணி மருந்து செலுத்தும் திட்டம் 09.08.2025 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கென 1,80,000 வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசிகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திடமிருந்து கொள்முதல்செய்யப்பட்டுள்ளது.

**தடுப்பூசி**

மண்டல வாரியாக, கோட்டம் வாரியாக தெரு நாய்களை அவை வசிக்கும் தெருக்களுக்கே சென்று தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக மருத்துவர்கள் மற்றும் சுமார் 150 பயிற்சி பெற்ற நாய் பிடிக்கும் பணியாளர்கள் மூலம் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி நாய் பிடிக்கும் பணியாளர்கள் வலைகளை கொண்டு நாய்களை பிடித்த பின்னர் கால்நடை மருத்துவரால் அவற்றிற்கு வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தப்படும். பின்னர் அந்த நாய்களுக்கு வண்ண சாயம் (Vegetable dye) தெளித்து அடையாளப்படுத்தி அவை மீண்டும் அதே இடத்திலேயே விடுவிக்கப்படுகின்றன.

**சிறப்பு முகாம்**

இந்த சிறப்பு முகாம்களின் வாயிலாக இதுவரை திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு. வி.க நகர், தேனாம்பேட்டை, ஆலந்தூர், அடையாறு மற்றும் பெருங்குடி ஆகிய 10 மண்டலங்களில் இப்பணி நிறைவு பெற்றுள்ளது.

**ஒட்டுண்ணி**

அவ்வாறாக, 31.10.2025 அன்று வரை திருவொற்றியூர் மண்டலத்தில் 9,496, மணலி மண்டலத்தில் 5,174, மாதவரம் மண்டலத்தில் 11,671, இராயபுரம் மண்டலத்தில் 8,211, திரு. வி.க நகர் மண்டலத்தில் 10,576, அண்ணா நகர் மண்டலத்தில் 2,942, தேனாம்பேட்டை மண்டலத்தில் 7,088, கோடம்பாக்கம் மண்டலத்தில் 5,534, ஆலந்தூர் மண்டலத்தில் 3,726, அடையாறு மண்டலத்தில் 7,937, பெருங்குடி மண்டலத்தில் 8,997, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் 8,492 என 10 மண்டலங்களில் மொத்தம் 1,00,347 தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

**தெருநாய்கள்**

தற்போது, அண்ணா நகர், கோடம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், அம்பத்தூர் மற்றும் வளசரவாக்கம் ஆகிய மண்டலங்களில் தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து விரைவில் அளிக்கப்படவுள்ளது.

**ஒத்துழைப்பு**

வெறிநாய்க்கடிநோய் இல்லாத சென்னை என்ற இலக்கை அடைவதற்கு பொது மக்களும், செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களும் மற்றும் விலங்கு நல ஆர்வலர்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சேலம் மாநகராட்சிப்பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகள்

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்



**சேலம்,நவ.03-**

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் (02.11.2025) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் அனைத்து திட்டங்களையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாக பொதுமக்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதிகள், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்திடவும், நியாய விலைக்கடைகள், தெருவிளக்குகள், பொது பயன்பாட்டு கட்டடங்கள் உள்ளிட்டவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இன்றையதினம் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.12.95 கோடி மதிப்பீடில் 141 சாலை மேம்பாட்டு பணிகள் 27.139 கி.மீ நீளத்திற்கும், மாநில நிதிக்குழு மானியத்தில் ரூ.11.56 கோடி மதிப்பீட்டில் 114 சாலை மேம்பாட்டு பணிகள் 15.51 கி.மீ நீளத்திற்கும், சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.12.52 கோடி மதிப்பீட்டில் 135 சாலை மேம்பாட்டு பணிகள் 20.97 கி.மீ நீளத்திற்கும் என மொத்தம் ரூ.37.03 கோடி மதிப்பீட்டில், 63.63 கி.மீ நீள 390 சாலை மேம்பாட்டுப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்து பணிகளையும் உரிய கால அளவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் உமாராணி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரை அதியமான் பப்ளிக் பள்ளியில் தீ விபத்து மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

**ஊத்தங்கரை,நவ.03-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அதியமான் பப்ளிக் பள்ளியில் தீ விபத்து மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது, அதியமான் பப்ளிக் மற்றும் அதியமான் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் இணைந்து சாரண இயக்கத்தின் வழிகாட்டுதலில் கீழ் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது, மாணவர்களிடையே தீ தடுப்பு மீட்பு நடவடிக்கைகள் மற்றும் அவசர நிலையை எதிர்கொள்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த நிகழ்ச்சி முக்கிய நோக்கமாகும், மாணவி ஹேமா வர்ஷினி அவர்களின் வரவேற்புரை நிகழ்ச்சி தொடங்கியது,தீயணைப்பு மற்றும் மீட்பு நிலை அதிகாரி ராமமூர்த்தி தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு தீ விபத்து மற்றும் பாதுகாப்பு பற்றிய பய



னுள்ள தகவல்களை வழங்கி உரையாற்றினார், மாணவர்கள் தீயணைப்பு துறை அதிகாரிகளிடம் கேள்விகள் எழுப்பி பாதுகாப்பு நடைமுறைகளை குறித்து அறிந்து கொண்டனர்,தீ விபத்துகளின் போது எடுக்க வேண்டிய விரைவான மற்றும் பாதுகாப்பான நடவடிக்கை குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர், மேலும் தீயணைப்பு வீரர்களின் தியாகம் மற்றும் வீரத்தினை உணர்ந்து போற்றினர், ராமமூர்த்தி தலைமையிலான ஊத்தங்கரை தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினருக்கு பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பாராட்டினை தெரிவித்தனர், மாணவி யாஷிகா நன்றி உரையோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது,நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் செய்திருந்தனர்,

# ஊத்தங்கரை அருகே நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்: கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் ஆய்வு

**கிருஷ்ணகிரி,நவ.03-**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சாமல்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமை கலெக்டர் ச.தினேஷ் குமார் , நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஒவ்வொரு சனிக்கிழமை நாட்களில் தலா 3 முகாம்கள் என 10 வட்டாரங்களில் 30 மருத்துவ முகாம்களும், மாநகராட்சியில் 3 முகாம் என மொத்தம் 33 மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. நாளதுவரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூர் மாநகராட்சி, பாகலூர், தளி, கெலமங்கலம், ஆலப்பட்டி, சூளகிரி, வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், சிங்காரப்பேட்டை மற்றும் ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

தொடர்ந்து, சாமல்பட்டி



அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் பொது மக்கள் பயன்பெறும் வகையில், சிறப்பு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சைக்கான மருத்துவ ஆலோசனை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மன நல மருத்துவம் மற்றும் இரத்த பரிசோதனை மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை, *X-Ray, ECG, ECHO, Ultra Sound* மற்றும் கண் பரிசோதனை, தொற்றா நோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக பரிசோதனை, சித்த மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நடைபெற்ற மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 102-மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் மற்றும் 47 நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு செயற்கை கால் வழங்கும் பொருட்டு அளவீடு மற்றும் தொழிலாளர் நலத்துறை சார்பாக கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற 6 நபர்களுக்கு மாதாந்தர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ரமேஷ் குமார், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மரு.மாலதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் முருகேசன், வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.ரங்கசாமி,மரு.சிவக்குமார் , ஊத்தங்கரை அரசு மருத்துவமனை அலுவலர் மரு. எழிலரசி வட்டாட்சியர் ராஜலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் நரசிம்மன், குண.வசந்தரசு, மற்றும் மருத்துவர்கள், சுகாதார பணியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# நாமக்கல் பழைய அரசு மருத்துவமனையில் 3 புதிய பொது சுகாதார அலகுகள் மற்றும் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள்

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், மா.மதிவேந்தன் திறந்து வைத்தனர்

**நாமக்கல்,நவ.03-**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மாநகராட்சி, பழைய அரசு மருத்துவமனையில் (02.11.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் கலெக்டர் துர்காமூர்த்தி, ஆகியோர் தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் , நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் , மேயர் து.கலாநிதி , இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் மு.விஜயலட்சுமி, ஆகியோர் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் 50 ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை உட்பட 3 புதிய பொது சுகாதார அலகுகள் மற்றும் 2 புதிய துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்களை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது,

நாமக்கல் மாவட்டத்தின் மருத்துவ வளர்ச்சியில் ஒரு புதிய மைல் கல் என்ற வகையில், பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூ.1.00 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் சித்த மருத்துவம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மூலமாக பொது மக்களுக்கு சிகிச்சை வழங்கப்பட உள்ளது. இம்மருத்துவமனையில் சித்த மருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறைகளான தொக்கணம், ஒற்றடம், நீராவி குளியல், புற வளையம், சிறதாரை, வர்மம், அட்டை விடல், சுட்டிகை, வேது பிடித்தல், நசியம் போன்ற சிகிச்சைகள் மருத்துவ பயனாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது. இவ்வளாகத்தில் ஏற்கனவே செல்பட்டுக் கொண்டிருக்கும் 16 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவ பிரிவும் சேர்த்து 66 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட உள்ளது. புதிய பணியிடங்களும் உருவாக்கப்பட்டு, நாமக்கல் மாவட்ட மக்களுக்கு பயன்தரும் பெரிய அளவில் வகையில் இம்மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நாமக்கல் மாவட்ட மக்கள் சித்த மருத்துவத்தின் மீது அதித நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். கொல்லிமலை சித்தர்களால் ஆளப்பட்ட மிகப்பெரிய மையம். உலக அளவிலான சித்த மருத்துவத்திற்கான புகழிடம் என்றால் அது கொல்லிமலை ஆகும். கொல்லிமலையை ஆராய்ச்சி மையமாக கொண்டு, பழைய அரசு மருத்துவமனையில் 9 ஏக்கர் பரப்பளவில் சித்த மருத்துவமனையை தொடங்கி வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் 16 படுக்கை வசதி கொண்ட சித்த மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு, மேலும் புதியதாக 50 படுக்கை வசதியை செய்து கொடுத்துள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி, 60 படுக்கைகளுடனான சித்த மருத்துவனை எங்கே செயல்படுகிறதோ, அங்கே சித்த மருத்துவக் கல்லூரி அமைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, ஆகவே ஒதுக்கீடு செய்யபட்ட 66-படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனையானது 2 ஆண்டுகளில் அரசு விதிமுறைகளின்படி, அரசு சித்த மருத்துவக் கல்லூரியாக தரம் உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. கடந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தது போல இன்றைய தினம், ரூ.6 இலட்சம் செலவில், நாமக்கல் மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களை பராமரிப்பதற்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் (*Emergency Care and Recovery Centres -ECRC*) – தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. வீடற்ற மனநலம் பாதிக்கப்பட்ட பயனாளர்களுக்கான தமிழக அரசு மேற்கொண்டு வரும் தற்போதைய முயற்சிகளுக்கு சுகாதார மற்றும் குடும்பநலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, காவல்துறை, குழந்தைகள் நலத்துறை, தமிழ்நாடு மகளிர் வளர்ச்சிக் கழகம், சமூக நலத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற முக்கிய துறைகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளது. இத்துறைகளின் மூலம் பயனாளர்களின் மீட்பு, தங்குமிடம், சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆகிய முக்கிய சேவைகள் வழங்கப்படவுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் இம்மையம் 10 படுக்கைகளுடன் செயல்பட உள்ளது. இம்மையம் அரசின் உதவியுடன் அரசு சாரா அமைப்பான (*NGO) Dream India Network* மூலமாக செயல்படவுள்ளது. புற நோயாளிகளை அடையாளம் கண்டு, தொடக்க நிலை சிகிச்சை வழங்கி, பிறகு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி சிகிச்சை வழங்குவதற்கான கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட வட்டார மருத்துவமனை வளாகத்தில் புற நோயாளிகள் வார்டு உருவாக்கி தருவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்த வரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழி காட்டுதலின் படி, ரூ.364.74 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்தி வேலூர், இராசிபுரம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் ரூ.129.75 கோடி செலவில் 34 மருத்துவ கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் பிற பணிகளில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி ஆணைகளையும், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மாநகராட்சி துணை மேயர் செ.பூபதி, பொது சுகாதாரம் (ம) நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம் (சென்னை), நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கே.சாந்தா அருள்மொழி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் (சேலம் (ம) நாமக்கல்) மரு. கோ.புகழேந்தி, இணை இயக்குனர் (மருத்துவப்பணிகள்) மரு.அ.ராஜ்மோகன், மாவட்ட நல அலுவலர் மரு.க.பூங்கொடி, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், உதவி சித்த மருத்துவ அலுவலர் மரு.து.தமிழ்செல்வன், உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்திய தேர்தல் கமிஷன் மூலம் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி ஆலோசனைக்கூட்டம்

## முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பங்கேற்பு



**நாமக்கல்,நவ.03-**

நாமக்கல் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் இந்திய தேர்தல் கமிஷன் மூலம் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி கலந்து கொண்டு அதிமுக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பேசியதாவது,

தமிழகத்தில் வருகின்ற 4-ம் தேதி முதல் டிசம்பர் 4-ம் தேதி வரை எஸ்.ஐ.ஆர் வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம் நடைபெறுகிறது. இந்த முகாம் நடப்பது மிக மிக நல்லது. காரணம் நாம் பலமுறை இறந்த வாக்காளர்களை வெளியூர் சென்ற வாக்காளர்களை நீக்குவதற்கு எழுதிக் கொடுத்தும் இன்னும் நீக்காமல் அவர்களது பெயர் பட்டியலில் இருந்து வருகிறது. தற்போது தேர்தல் கமிஷனே அந்த திருத்தத்தை மேற்கொள்வதை நாம் வரவேற்கிறோம். அனைவரும் அதற்கும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்.

பூத் கமிட்டி உறுப்பினர்கள் அரசு அலுவலருடன் சென்று எந்த வாக்காளரும் விடுபட்டு விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். போலி வாக்காளர்களை சேர்த்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பூத்திலும் 30 முதல் 40 இறந்த வாக்காளர்களும், அடையாளம் தெரியாத வாக்காளர்களும், வெளியூர் சென்ற வாக்காளர்களும் பட்டியலில் உள்ளனர். அவற்றை நீக்க கூடாது என்பதற்காக திமுகவினர் எஸ்.ஐ.ஆர்-ஐ எதிர்க்கின்றனர். இந்த அரசு எப்படி மக்களை கவனிக்கவில்லை என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், தமிழகம் முழுவதும் நல்ல மழை பெய்து அனைத்து அணைகளும் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. மேட்டூர் அணை ஏழுமுறை நிரம்பி இருக்கிறது. ஆனால் கடந்த ஒரு வார காலமாக மேட்டூர் இடது கரை வலது கரை வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை. நாங்கள் தொடர்ந்து அதிகாரிகள் இடத்தில் புகார் செய்தோம், முறையான பதில் இல்லை. நெற்பயிர் எல்லாம் காய்ந்து கிடைக்கிறது. உடனடியாக இந்த அரசு கவனத்தில் எடுத்து வாய்க்காலில் தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பேசினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மருத்துவர் வெ.சரோஜா, பரமத்தி வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொறியாளர் எஸ்.சேகர், மாநில வழக்கறிஞர் பிரிவு துணைத் தலைவர் ஏ.வி.பாலுசாமி, அமைப்புச் செயலாளர் எஸ்.ராஜு, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ஸ்ரீதேவி பி.எஸ்.மோகன். மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ராஹா சு.தமிழ்மணி, மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளரும் வழக்கறிஞருமான கே. பி.எஸ்.சுரேஷ் குமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளரும், வழக்கறிஞருமான முரளி பாலுசாமி, மாவட்ட கலை பிரிவு செயலாளர் எம்.சிங்காரவேலு உட்பட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



**மொரப்பூர்,நவ.03-**

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளரும்,முன்னாள் உயர் கல்வித் துறை அமைச்சருமான பி.பழனியப்பன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கடந்த மாதம் 28 ஆம் தேதி மாமல்லாபுரத்தில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சிக்கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகள் குறித்தும்.

வாக்காளர் பட்டியலில் திருத்தத்தை 04.11.2025 அன்று முதல் நடைமுறைபடுத்துதல்,தமிழ்நாடு துணை முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவினை எளியோரின் எழுச்சி நாளாக கொண்டாடுவது,2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைவர் மீண்டும் 7-வது முறையாக ஆட்சி அமைக்க இணையத்தில் செயல்பாடு குறித்தும் விளக்கி பேசினார். ஆற்றினார். இக்கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சி. சண்முகம்,பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கொ. கண்ணப்பன்,சுலைமான்,சரண்யா ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் பொன் வேலுசாமி,தர்மசீலன்,நந்தினி, தெய்வமணி,சுதா,விஜய்,விக்னேஷ்,கார்த்திக்,ராதிகா,சக்தி,பிரதாப்,கங்கை அமரன்,மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் ஆஞ்சநேயர் கோயிலில் விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம் நிகழ்ச்சி

**நாமக்கல்,நவ.03-**

நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் மண்டபத்தில் ஆன்மிக வேள்வி நிகழ்ச்சியில் மோகனூர் விஷ்ணு சஹஸ்ரநாம பாராயண மண்டலி சார்பில் விஷ்ணு சஹஸ்ரநாம பாராயண பக்தி சொற்பொழிவு நடைபெற்றது.

நாமக்கல் தமிழ்ச் சங்கம், ஆன்மிக வேள்வி தலைவர் இரா. குழந்தைவேல் அனைவரையும் வரவேற்றார். ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் கே.நல்லுசாமி தலைமை வகித்தார். கிரீன்பார்க் கல்வி நிறுவனங்களின் இயக்குநர் ஆன்மிக பைங்கொழுந்து டாக்டர் எஸ்.குருவாயூரப்பன், கோயில், உதவி ஆணையர் இரா.இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமங்கள் ஆயிரம் என்ற தலைப்பில் வைஷ்ணவத் திலகம் கும்பகோணம் மருத்துவர் உ.வே.வேங்கடேஷ் விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் சிறப்புகளை எடுத்துரைத்தார். அப்பொழுது அவர் பேசியதாவது,

நம்பிக்கையோடு பாராயணம் செய்பவர்களுக்கு கை மேல் பலன் தரும் அற்புத மந்திரங்கள் கொண்டது விஷ்ணு சஹஸ்ரநாமம், மஹா பெரியவர் ஸ்வாமிகள் இதன் பெருமைகளை பலமுறை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஒரு முறை மஹா பெரியவருக்கு கடுமையான காய்ச்சல் வந்த போது, மருந்து மாத்திரை எடுத்துக்கொள்ளாமல் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயாணம் செய்து, அதன் மூலமே காய்ச்சலை சரி செய்த அனுபவத்தை ஒரு புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொண்டேன்..இத்தனை அற்புதங்கள் செய்யும் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை தினமும் காதால் கேட்டாலே மிகவும் நன்மை தரும். சத்தமாக பாராயாணம் செய்தால் எண்ணற்ற பலன்களை அளிக்கும் என்றார். இந்த நிகழ்ச்சியை கலைமாமணி பேராசிரியர் அரசு பரமேசுவரன் தொகுத்து வழங்கினார். பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# கும்பகோணத்திற்கு 27 லட்சத்து 30 ஆயிரம் சாக்குகள் ரயில் மூலம் வந்தது

**சாமி மலை,நவ.03-**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் கோட்டத்தில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்கள், சேமிப்பு கிடங்குகளுக்கு ரயில் மூலம் 27 லட்சத்து 30 ஆயிரம் சாக்குகள் வந்தன. மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள கல்கத்தா சணல் ஆலை மூலம் டிட்டாகாக் ரயில் நிலையத்திலிருந்து கும்பகோணத்திற்கு ரயில் மூலமாக 42 பெட்டிகள் வந்தது. அதில் 5,470 சாக்கு பண்டல்களில் ஒரு பண்டலுக்கு தலா 500 சாக்குகள் விகிதம் 27 லட்சத்து 30 ஆயிரம் வந்தன. இந்த சாக்குகள் கும்பகோணம் பாபநாசம் திருவிடைமருதூர் உள்ளிட்ட நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் சேமிப்பு கணங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. கும்பகோணம் பகுதியில் குருவையில் நெல் கொள்முதல் செய்ய உள்ள நிலையில் அதற்கு இன்னும் தாக்குதல் தேவைப்படுகின்றன. சாக்குகள் போதுமான அளவு இருப்பு உள்ளதால் தேவைப்பட்டால் வரவழைக்கப்படும் என்று நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆஸி.,க்கு எதிராக வாஷிங்டன் சுந்தர் அபாரம்:

# 3-வது டி-20 போட்டியில் இந்தியா அபார வெற்றி



**மெல்போர்ன, நவ. 03-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது டி20 ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றி மூலம் 1 - 1 என்கிற அளவில் இரு அணிகளும் சமனில் இருக்கின்றன.

**சுற்றுப்பயணம்...**

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒருநாள், டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நிறைவடைந்த நிலையில், 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரும் துவங்கியுள்ளன. முதல் ஆட்டம் மழையால் ரத்தாக, இரண்டாம் ஆட்டத்தில் ஆஸி. வென்றது. நேற்று மூன்றாம் ஆட்டம் நடைபெற்றது.


**187 ரன்கள் இலக்கு...**

இதில், முதலில் பேட்டிங் செய்த பேட்டிங் செய்த ஆஸி. அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 186 ரன்கள் எடுத்தனர். 187 ரன்கள் எடுத்தால் வெற்றி என்கிற இலக்குடன் இந்திய அணி வீரர்கள் களமிறங்கினர். அறிமுக ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா அதிரடியான துவக்கத்தைக் கொடுத்தாலும் 25 ரன்களில் ஆட்டமிழந்தார்.

**49 ரன்களுடன்...**

தொடர்ந்து ஆடியவர்களும் 20-களில் ஆட்டமிழக்க ஆல் ரவுண்டர் வாஷிங்டன் சுந்தர், ஜித்தேஷ் ஷர்மா இணை அதிரடியாக விளையாடி இந்தியாவை வெற்றி பெற வைத்துள்ளனர். இலக்கை 18.3 ஓவரில் எட்டியதுடன் வாஷிங்டன் சுந்தர் 49 ரன்களுடன் ஆட்டமிழக்காமலும் இருந்தார். இந்த வெற்றி மூலம் 1 - 1 என்கிற அளவில் இரு அணிகளும் சமனில் இருக்கின்றன.

# சர்வதேச டி-20 கிரிக்கெட்டில் இருந்து வில்லியம்சன் ஓய்வு



**சிட்னி, நவ. 03-**

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனான கேன் வில்லியம்சன், சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

**2,575 ரன்கள் குவிப்பு...**

35 வயதான அவர், நியூஸிலாந்து அணிக்காக 93 டி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். கடந்த 2011-ல் ஜிம்பாப்வே அணிக்கு எதிராக அவர் விளையாடி இருந்தார். அவர் தலைமையிலான நியூஸிலாந்து அணி, 2021 டி20 உலகக் கோப்பை இறுதி, 2016 மற்றும் 2022 அரையிறுதி ஆட்டத்திலும் விளையாடி இருந்தது. சர்வதேச டி-20 கிரிக்கெட்டில் 2,575 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 18 அரை சதங்கள் அடங்கும். 2021 டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 85 ரன்கள் எடுத்திருந்தார்.

**அணியை கட்டமைப்பு...**

அணியுடன் நான் பெற்ற அனுபவங்களும், இந்த நீண்ட பயணத்தின் நினைவும் இனிதானது. நான் ஓய்வு பெற இது சரியான தருணம் என கருதுகிறேன். இது எனக்கும், அணிக்கும் நல்ல முடிவாக அமையும் என நம்புகிறேன். ஏனெனில், அடுத்து டி20 உலகக் கோப்பை தொடர் நடைபெற உள்ளது. அதற்கான அணியை கட்டமைப்பது அவசியம். டி20 கிரிக்கெட்டில் திறன் படைத்த வீரர்கள் பலர் இதில் வாய்ப்பு பெறுவார்கள். அவர்கள் உலகக் கோப்பை தொடருக்கு ஆயத்தமாக இது உதவும்" என வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

**மத்திய ஒப்பந்தத்தில்...**

ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் வில்லியம்சன் தொடர்ந்து விளையாடுவார். நியூஸிலாந்து கிரிக்கெட் அணி வீரர்களுக்கான மத்திய ஒப்பந்தத்தில் இடம்பெறாத வில்லியம்சன், உலக அளவில் நடைபெறும் பல்வேறு லீக் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தென் ஆப்பிரிக்கா 'ஏ' அணியை வீழ்த்தியது இந்தியா 'ஏ' அணி



**பெங்களூரு, நவ. 03-**

பண்ட் சிறப்பான பேட்டிங்கால் . தென் ஆப்பிரிக்கா ஏ அணியை வீழ்த்தி இந்தியா ஏ வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா ஏ 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க ஏ கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இந்தியா 'ஏ'- தென் ஆப்பிரிக்கா 'ஏ' அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி (4 நாள் ஆட்டம்) பெங்களூருவில் உள்ள இந்திய கிரிக்கெட் வாரிய சிறப்பு மைய மைதானத்தில் நடைபெற்றது.

**3-வது நாள் ஆட்டம்...**

இதில் முதல் இன்னிங்சில் தென் ஆப்பிரிக்கா 'ஏ' 309 ரன்னும், இந்தியா 'ஏ' 234 ரன்னும் எடுத்தன. பின்னர் 75 ரன் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்கா 'ஏ' 2-வது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 30 ரன்கள் எடுத்திருந்தது. நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து பேட் செய்த தென்ஆப்பிரிக்க 'ஏ' அணி 48.1 ஓவர்களில் 199 ரன்னில் அடங்கியது. இந்தியா தரப்பில் தனுஷ் கோடியன் 4 விக்கெட்டும், அனஷூல் கம்போஜ் 3 விக்கெட்டும், குர்னோர் பிரார் 2 விக்கெட்டும் சாய்த்தனர்.

**32 ரன்களுக்குள்...**

இதனையடுத்து 275 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்சை ஆடிய இந்திய 'ஏ' அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஆயுஷ் மாத்ரே 6 ரன்னிலும், அடுத்து வந்த தேவ்தத் படிக்கல் 5 ரன்னிலும், மற்றொரு தொடக்க வீரர் சாய் சுதர்சன் 12 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 32 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இதைத் தொடர்ந்து கேப்டன் ரிஷப் பண்ட், ரஜத் படிதாருடன் ஜோடி சேர்ந்தார். ரஜத் படிதார் நிதானமாக ஆட, மறுமுனையில் ரிஷப் பண்ட் ஏதுவான பந்துகளை எல்லைக் கோட்டுக்கு விரட்டி அணியை சரிவில் இருந்து மீட்க முயற்சித்தார். ஸ்கோர் 119 ரன்னை எட்டிய போது ரஜத் படிதார் 28 ரன்னில் கேட்ச் கொடுத்து வெளியேறினார்.

**156 ரன்கள் தேவை...**

3-வது நாள் ஆட்ட நேரம் முடிவில் இந்திய 'ஏ அணி 4 விக்கெட்டுக்கு 119 ரன்கள் அடித்திருந்தது. அரைசதம் விளாசிய ரிஷப் பண்ட் 64 ரன்களுடனும் (81 பந்து, 8 பவுண்டரி, 2 சிக்சர்), ஆயுஷ் பதோனி ரன் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இந்தியா வெற்றி பெற இன்னும் 156 ரன்கள் அடிக்க வேண்டும் என்ற நிலையில் 4-வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்திய பண்ட் - பதோனி ஜோடி இந்திய அணியை வெற்றியை நோக்கி பயணிக்க வைத்தது. பதோனி 34 ரன்களில் ஆட்டமிழந்தார்.

**மனவ் - கம்போஜ்...**

மறுபுறம் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட பண்ட் 90 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் கோட்டியான் (23 ரன்கள்), மனவ் சுதர் (20 ரன்கள்) மற்றும் கம்போஜ் (37 ரன்கள்) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. 73.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 277 ரன்கள் அடித்த இந்தியா ஏ 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா ஏ 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. தனுஷ் கோட்டியான் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

# அரையிறுதியில் அலெக்சாண்டர் தோல்வி

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள பாரீஸ் மாஸ்டர் டென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான அலெக்சாண்டர் பப்ளிக் (கஜகஸ்தான்) - பெலிக்ஸ் ஆகர்-அலியாசிம் (கனடா) ஆகியோர் மோதினர்.

இந்த மோதலில் எளிதில் வெற்றி பெற்று இறுதிபோட்டிக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட அலெக்சாண்டர் பப்ளிக், யாரும் எதிர்பார்க்கா வண்ணம் 6-7 (3-7), 4-6 என்ற செட் கணக்கில் பெலிக்ஸ் ஆகர்-அலியாசிமிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறினார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

கல்லறை திருநாளை முன்னிட்டு

# முன்னோர்களின் கல்லறைகளில் பிரார்த்தனை செய்த கிறிஸ்தவர்கள்

**சென்னை, நவ. 03-**

கல்லறை திருநாளை முன்னிட்டு நேற்று கல்லறைத் தோட்டங்களுக்கு சென்ற கிறிஸ்தவர்கள், தங்கள் முன்னோர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து, மலர்களால் அலங்கரித்து, மெழுகுவர்த்தி ஏற்றி பிரார்த்தனை செய்தனர்.

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களால் நவம்பர் 2-ந் தேதி கல்லறை திருநாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில் கிறிஸ்தவர்கள் தங்களின் முன்னோர்கள் மற்றும் உறவினர்களின் கல்லறைகளுக்குச் சென்று, அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வது வழக்கம். தேவாலயங்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

அவ்வகையில் நேற்று கல்லறை திருநாள் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி கல்லறைத் தோட்டங்களுக்கு சென்ற கிறிஸ்தவர்கள், தங்கள் முன்னோர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து, மலர்களால் அலங்கரித்து, மெழுகுவர்த்தி ஏற்றி பிரார்த்தனை செய்தனர். சிலர் இறந்த தங்கள் முன்னோர்களுக்கு பிடித்த உணவுகளை படைத்தும் பிரார்த்தனை செய்தனர். பின்னர் ஏழை, எளிய மக்களுக்கு உணவுகளை வழங்கினர். முன்னோர்களின் ஆன்மா இளைப்பாறுதலுக்காக திருப்பலி நடைபெற்றது.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஆரோக்கிய அன்னை திருத்தலம் கல்லறை தோட்டத்தில் கல்லறை திருநாள் வழிபாடு நடந்தது. இந்த வழிபாட்டையொட்டி ஏராளமான கிறிஸ்துவர்கள் தங்களின் முன்னோர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து மலர்களால் அலங்கரித்து மெழுகுவர்த்தி ஏற்றி சாம்பிராணி தூபம் போட்டு அவர்களுக்கு பிடித்தமான பொருட்கள் வைத்து அவர்களின் ஆன்மா இளப்பாற வழிபாடு செய்தனர். பங்கு தந்தை ரமேஷ் அடிகளார் ஒவ்வொரு கல்லறைக்கும் சென்று பிரார்த்தனை செய்து தூபமிட்டு அர்ச்சித்தார்.

உயிர் நீத்தவர்கள் ஆன்மா இளைப்பாற்றலுக்காக பூண்டி மாதா பேராலயத்தில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிவடைந்ததும் பூண்டி மாதா பேராலயத்தின் பங்குத்தந்தையாக பணியாற்றி மறைந்த, பூண்டி மாதா பேராலயத்தின் உள்ளேயே அடக்கம் செய்யப்பட்டு உள்ள, புனிதர் பட்டத்திற்கு எதிர்நோக்கியுள்ள அருட் தந்தை லூர்து சேவியர் கல்லறையை பேராலய அதிபர் சாம்சன் புனிதம் செய்தார்.

கல்லறை திருநாளை முன்னிட்டு அருட்தந்தை லூர்து சேவியர் கல்லறையானது மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. அவரது கல்லறை புனிதம் செய்யப்பட்டதற்கு பிறகு, பூண்டி மாதா பேராலயத்தில் பணியாற்றிய அருட்தந்தை ராயப்பர் கல்லறையை (பூண்டி மாதா பூங்காவில் உள்ளது) அருட்தந்தையர்கள் புனிதம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பூண்டி மாதா பேராலய அதிபர் சாம்சன், துணை அதிபர் ரூபன் அந்தோணி ராஜ், தியான மைய இயக்குனர் ஆல்பர்ட் சேவியர், உதவி பங்கு தந்தையர்கள் செல்வகுமார், லாரன்ஸ் ஆன்மீக தந்தை ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக

# வேலுச்சாமிபுர வியாபாரிகளிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை

**கரூர், நவ. 03-**

கரூர் வேலுச்சாமிபுரத்தைச் சேர்ந்த வியாபாரிகளிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை காலை விசாரணை மேற்கொண்டனர்.


கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி நடைபெற்ற த.வெ.க. பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேல் 110 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கரூர் நகர காவல் ஆய்வாளர் மணிவண்ணன் அளித்த புகாரின் பேரில் த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல் குமார், மேற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

சுப்ரீம் கோர்ட் உத்தரவின் படி இந்த வழக்கின் விசாரணை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து குஜராத்தை சேர்ந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் குமார் தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த மாதம் 17 ஆம் தேதி முதல் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அக். 31-ம் தேதி வேலுச்சாமி புரத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்ட பகுதியில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகளிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4:30 மணி வரை சி.பி.ஐ. அதிகாரிகள் வேலுச்சாமி புரத்திற்கு சென்று அங்கு சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு நவீன கருவியான 3டி லேசர் ஸ்கேனருடன் ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை சி.பி.ஐ. அதிகாரிகள் தங்கி இருக்கும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சுற்றுலா மாளிகைக்கு வேலுச்சாமிபுரத்தில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கடைகள் வைத்திருக்கும் மளிகைக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் துணிக்கடை வியாபாரிகள், பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் உள்ளிட்ட 10 பேரை வரவழைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# டிம் டேவிட் மாபெரும் சாதனை



இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஹோபர்ட்டில் நடைபெற்ற 3-வது ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி டிம் டேவிட், மார்கஸ் ஸ்டோய்னிஸ் ஆகியோரின் அதிரடி அரைசதத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 186 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக டிம் டேவிட் 74 ரன்களும், ஸ்டோய்னிஸ் 64 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் டிம் டேவிட் வெறும் 23 பந்துகளில் அரைசதம் விளாசினார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக குறைந்த பந்துகளில் அரைசதம் விளாசிய 2-வது ஆஸ்திரேலிய வீரர் என்ற மாபெரும் சாதனையை டிம் டேவிட் படைத்துள்ளார். அந்த பட்டியல் வருமாறு., 1. கேமரூன் கிரீன் - 19 பந்துகள், 2. டிம் டேவிட் - 23 பந்துகள், 3. டிராவிஸ் ஹெட் - 24 பந்துகள்.

# காலிறுதியில் லக்சயா தோல்வி

ஹைலோ ஓபன் பேட்மிண்டன் தொடர் ஜெர்மனியில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் லக்சயா சென், அயர்லாந்தின் நகாட் நுகெயன் உடன் மோதினார். இந்த மோதலில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய நகாட் நுகெயன் 21-17, 14-21, 21-15 என்ற செட் கணக்கில் லக்சயா சென்னை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதி போட்டியில் பின்லாந்து வீரர் காலே கோலிஜோனன் 19-21, 21-12, 22-20 என்ற செட் கணக்கில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டியைத் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாக

# தமிழக அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்களின் கருத்துகள்

**சென்னை, நவ. 03-**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்தை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்காவிட்டால் சுப்ரீம் கோர்ட்டில் அனைத்துக் கட்சிகள் சார்பில் வழக்கு தொடர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முதல்வர் தலைமையில்...**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தே.மு.தி.க., வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ., திராவிடர் கழகம், ம.தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றுள்ளன. பா.ம.க, நா.த.க., த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்துள்ளன.

**திராவிடக் கழகம்....**

இந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்ற திராவிடக் கழக தலைவர் கி.வீரமணி பேசுகையில், "வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் செய்ய அரசியலமைப்பு சட்டப்படி அதிகாரம் இல்லை. எஸ்ஐஆரில் ஆபத்தான விஷயங்கள் உள்ளது. இதன்படி பூத் லெவல் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்க சட்ட சம்மதம் கிடையாது. முதல்வர் கூட்டியுள்ள இந்த அனைத்துக் கட்சி கூட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக உள்ளது. சுப்ரீம் கோர்ட், உயர் நீதிமன்றத்தில் எஸ்ஐஆரில் உள்ள அம்சங்கள் குறித்து வழக்கு தொடர வேண்டும்" என்றார்

**தமிழக காங்கிரஸ்...**

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பேசுகையில், " எஸ்.ஐ.ஆர். பணிக்காக குடியுரிமை சான்றிதழ் கேட்டால் யாராலும் கொடுக்க முடியாது. நவம்பர் 4 முதல் ஒரு மாதத்தில் எஸ்.ஐ.ஆர். பணியை முடிக்க சொல்லியுள்ளனர், இது பருவமழை காலம். எப்படி அலுவலர்களால் இதனை செய்ய முடியும். தேர்தல் ஆணையம் செய்வது மோசடியான நடவடிக்கை. தமிழகத்தில் நேரடியாக வெற்றிபெற முடியாது என்பதால், குறுக்கு வழியில் வெற்றிபெற முயற்சி செய்கிறது" என்றார்.

**வி.சி.க. தலைவர்...**

விசிக தலைவர் திருமாவளவன் பேசுகையில், " இது வாக்குரிமையை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் அல்ல; குடியுரிமையை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல். குடியுரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரத்தையே அவர்கள் கேட்கிறார்கள். 2002ம் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருந்தால் அதனை பொருத்திப் பார்க்க வேண்டும் என்கிறார்கள். மறைமுகமாக தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி என்ஆர்சி எனும் குடியுரிமை பதிவேட்டை உருவாக்கவே இந்த வேலையை செய்கிறார்கள்.

**ம.தி.மு.க. வைகோ...**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பேசுகையில், " ஆட்சி பொறுப்பில் இருந்த கட்சியும், இன்னும் சில கட்சிகளும் இந்த கூட்டத்தை புறக்கணித்திருப்பது வருத்தத்துக்கு உரியது. பீகாரில் எஸ்.ஐ.ஆர். பணி நடந்த போது அம்மாநிலத்தை சேர்ந்த 6.5 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன. அவர்களின் பெயரை தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படலாம் என்றும், சென்னையில் மட்டும் பீகாரை சேர்ந்தவர்கள் 3.5 லட்சம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணி நடந்தால் வெளிமாநிலத்தை சேர்ந்த 75 லட்சம் பேர் இங்கே வாக்காளர்களாகும் அபாயம் உருவாகலாம். தமிழகத்தை குறிவைக்கும் பா.ஜ.க. இத்தகையை நடவடிக்கையை ஏற்க முடியாது என்றார். சிபிஎம் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பேசுகையில், " வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் எப்படி மக்களின் உரிமைகளை பறிக்கிறது என்பது குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

**கமல்ஹாசன்...**

மநீம தலைவர் கமல்ஹாசன் பேசுகையில், " மக்களாட்சியின் அடித்தளமே வாக்குரிமைதான். தகுதியுள்ள ஒருவரின் பெயர் கூட வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடக் கூடாது. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் ஏன் இவ்வளவு அவசரமாக செய்யப்படுகிறது. இந்த அவசரத்தினால் 65 லட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, அவர்கள் வாக்குரிமையை இழந்துள்ளனர்.என்றார். தமிழகம், கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் மட்டும் எஸ்.ஐ.ஆர். பணியை மேற்கொள்வதற்கு வேறு உள்நோக்கம் உள்ளதா?. தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பிக்கை குறைந்துவிட்டது. இந்த பணியை நிதானமாக 2026 தேர்தலுக்குப் பின்னர் நடத்த வேண்டும் என்றார்.

# எஸ்.ஐ.ஆர். தொடர்பாக த.வெ.க. முன்வைத்த சில ஆலோசனைகள்

**சென்னை, நவ. 03-**

தமிழகத்தில் நாளை முதல் வாக்காளர் பட்டியல் திருத்தப்படவுள்ள நிலையில், இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகம் சில ஆலோசனைகளை முன் வைத்துள்ளது.

இதுதொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.,

வாக்காளர் பட்டியலில் ஏதேனும் தவறுகள் இருப்பின். முறையான படிவத்தின் படி பட்டியல் திருத்த நடைமுறை வாயிலாக. அதனைச் சரிசெய்து முறையான, சரியான வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும். இந்த நடைமுறை வாயிலாகப் புதிய வாக்காளர்களைச் சேர்க்க வேண்டும். இறந்தவர்களின் பெயர்களையும் போலியான பெயர்களையும் நிரந்தரமாக நீக்க வேண்டும். புதிய வாக்காளர்களுக்கான அடையாளம் மற்றும் வயது ஆதாரத்திற்கு ஆதார் அட்டையை ஓர் ஆவணமாக ஏற்க வேண்டும்.திருத்தம் செய்து இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலை அரசியல் கட்சிகளின் பாக முகவர்கள் சரிபார்க்கும் வகையில் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

வேட்புமனு தாக்கலுக்கான இறுதித் தேதிக்குப் பிறகு புதிய வாக்காளர்களைச் சேர்க்கக் கூடாது.வாக்காளர் திருத்த நடைமுறை முடிவடைந்து, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன் அரசியல் கட்சிகளுக்கு டிஜிட்டல் இயந்திரத்தில் வாசிக்கக்கூடிய வடிவில் அப்பட்டியல் வழங்கப்பட வேண்டும். இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலை இணையத்தில், எளிதில் தேடும் வசதியுடன் வெளியிட வேண்டும்.

நம் மண்ணின், மக்களின் உரிமையைக் காக்க, அரசியல் வேற்றுமைகளைப் புறந்தள்ளி இந்த விவகாரத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தமிழக வெற்றிக் கழகம் உறுதியாக இருக்கிறது. அதே சமயம். வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை வெறும் வாக்கு அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் தி.மு.க.வின் சூழ்ச்சியையும் அறிந்தே இருக்கிறோம்.

அண்டை மாநிலமான கேரள அரசு, சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராகச் சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றியுள்ளது. கேரள அரசின் இந்த நடவடிக்கை. அம்மக்களின் உரிமை மீதான அக்கறையைக் காட்டுகிறது. ஆனால், சிறப்புத் தீவிரத் திருத்தத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்ளும் தி.மு.க. இதுகுறித்துச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றாதது ஏன்?

தொகுதி மறுவரையறையை எதிர்க்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு, அரசு சார்பில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனவே அதில் கலந்துகொண்டு, மக்கள் உரிமைகளுக்காகத் தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாட்டினைத் தெரிவித்தோம். ஆனால். சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிரான தி.மு.க.வின் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கான நோக்கத்தையும் பின்னணியையும் மக்கள் அறியாமல் இல்லை. தேர்தல் நெருக்கத்தில் தி.மு.க.வின் இத்தகைய முன்னெடுப்பின் நோக்கம். தி.மு.க. அரசு மீது வரிசை கட்டி வரும் ஊழல் புகார்களில் இருந்து மக்களைத் திசை திருப்பும் கபட நாடக அரசியலே ஆகும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரின் அடையாளத்தை அழிக்க விரும்புகின்றன:

# காங்., ஆர்.ஜே.டி. மீது பிரதமர் மோடி தாக்கு

**பாட்னா, நவ. 03-**

பீகாரின் போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள அர்ரா வில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது: காங்கிரஸ், ஆர்ஜேடி ஆகிய கட்சிகள் பீகாரின் அடையாளத்தை அழிக்க விரும்புகின்றன. வாக்காளர்கள் இரண்டு கட்சிகளைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றிக்குப் பிறகு நாடு பெருமிதம் கொண்டது. ஆனால் காங்கிரசும் அதன் கூட்டாளியான ராஷ்டிரீய ஜனதா தளமும் அதை விரும்பவில்லை.

பாகிஸ்தானில் குண்டு வெடிப்புகள் நடந்தன. ஆனால் காங்கிரஸ் அரச குடும்பத்தினர் தூக்கமில்லாத இரவுகளைக் கழித்தனர். சிந்தூர் நடவடிக்கையின் அதிர்ச்சியிலிருந்து பாகிஸ்தானும், காங்கிரஸ் ஆதரவாளர்களும் இன்னும் மீளவில்லை. ஜம்மு காஷ்மீரில் எந்த அரசாங்கமும் 370-வது பிரிவை ரத்துசெய்ய முடியாது. ஆனால் நான் ஒரு உத்தரவாதம் அளித்து அதைச் செய்தேன்.

பீகார் விரைவில் கிழக்கு இந்தியாவின் ஜவுளி மற்றும் சுற்றுலாவின் முக்கிய மையமாக மாறும். பீகார் இளைஞர்கள் அனைவரும் சொந்த மாநிலத்தில் பணியாற்ற வேண்டும். மாநிலத்தை பெருமைப்படுத்த வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.தேர்தலுக்கு பிறகு ஆர்.ஜே.டி. மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் மோதி கொள்ளும். ஆர்.ஜே.டி. கட்சியைச் சேர்ந்த தேஜஸ்வியை முதல் மந்திரி வேட்பாளராக அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. இரண்டு கட்சிகள் இடையே மிகப்பெரிய உட்கட்சி மோதல் நடந்து வருகிறது.

மகா கூட்டணியின் தேர்தல் அறிக்கை பொய்களின் மூட்டையாக இருக்கிறது. பொய்கள், வஞ்சகம் மற்றும் மக்களை ஏமாற்றுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வரும் ஆண்டுகளில் ஒரு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என தெரிவித்தார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 03.11.2025 முதல் 09.11.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் அரசு வகை ஆதாயம் ஏற்படும். வங்கிகள் மூலம் கிடைக்கும் உதவிகள் தாமதப்பட்டாலும், புதிதாக தொழில் தொடங்கி ஆதாயம் காண முற்படுவீர்கள். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி மற்றும் நல்ல முன்னேற்றத்துக்காக கடுமையாக உழைக்க வேண்டிய காலம் இது. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, தாமதப்பட்ட மங்கல காரியங்கள் ஈடேறும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். குறைந்த அளவிலான உறவுகளோடு, குடும்ப விழாக்கள், சந்தோஷத் தருணங்களாக அமையும். மனைவியுடன் உறவு சீராக, மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்.

பரணி --

இந்த வாரம் நினைத்தது நினைத்தபடி நடக்கும். குடும்பத்தில் நடக்க இருக்கும் சுபகாரியங்கள் தாமதப்படும். அதற்காக, அலைந்து திரியும் நிலை ஏற்படும். குடும்பத்தில் இது நாள் வரை இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். நீண்ட நாட்களுக்குப் பிறகு, மனைவி, குழந்தைகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுத்து அவர்கள் மனம் மகிழச் செய்வார்கள். சகோதரர்களின் தீய நடவடிக்கைகள் சஞ்சலத்தை தரும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் மறைந்து, ஒற்றுமை நிலவும். அரசுப் பணியாளர்களுக்கு பணி இடங்களில் வேலை பளு அதிகமானாலும், அதிகாரிகள் அரவணைப்பு இருக்கும். ஒரு சிலருக்கு அதிக உழைப்பின் காரணமாக, அசதியும், உடல் பாதிப்பும் ஏற்படலாம்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே, மற்றவர்களின் வேலையையும் தானாக முன்வந்து பொறுப்போடு செய்வார்கள். உண்மை உழைப்பு காரணமாக பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கலைஞர்கள் இலக்கியவாதிகள் ஆகியோருக்குப் புதிய பட்டங்கள், பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் செல்லும் போது வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும். பயணங்கள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வகையில் எதிர்பார்த்த இலாபங்கள் இல்லை என்றாலும் ஓரளவு சமாளித்து விடுவார்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த தனவரவு இல்லாமல் வங்கியில் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசீரிடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர்களுக்கு திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார்கள். நீண்ட நாள் கனவுகள் நனவாகும். வாலிபர்கள் தோழர், தோழிகளுடன் பொதுச்சேவைகளில் ஈடுபடுவர். புதிய வாகனத்தை வாங்கும் முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது. நீங்கள் காட்டும் உண்மையான அன்பு கண்டு உறவுகள் மகிழ்ச்சி கொள்வார். அரசுப் பணிபுரியும் பெண்கள் தங்கள் பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளை, அதிகாரிகள் உதவியுடன் சமாளித்து விடுவர். ஒருவருக்கொருவர் எவ்வளவு அனுசரித்துச் சென்றாலும் வீட்டில் ஏற்படும் சிறு சச்சரவுகளை சமாளிக்க முடியாமல் போகலாம்.

ரோகிணி –

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு பலவழிகளிலும் அதிக தனவரவு ஏற்பட்டுப் பொருளாதார நிலை உயரும். ஊரில் உள்ள பெரிய மனிதர்களின் இனிய நட்பால் உங்களுக்கு வளமான எதிர்காலம், வாழ்க்கை முன்னேற்றங்கள் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு, பதவி உயர்வுடன் கூடிய இட மாற்றங்கள் ஏற்படலாம். அதன் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலை ஏற்படலாம். பெற்றோர்கள், உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்தியத் தொழில் திறமைகளைக் கண்டு பொறாமை கொள்வர். உங்கள் தீரம் மிக்க செயல்களால், அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் கையில் எடுக்கும் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் எறும்பு போன்ற உங்கள் வேகமான, சுறுசுறுப்பு மிக்க பணித் திறமைகளை வெளிக்காட்டி அதிகாரிகள், அன்பையும், பாராட்டுகளையும் பெறுவீர்கள். எதிர்பார்த்த நபர்களிடமிருந்து, எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து வேலை விஷயமாக தகவல்கள் வந்து சேரும். சமூக இடைவெளி, முக கவசம் என நோய் தடுப்பு நடவடிக்கைகளை கடைப்பிடித்து, தங்களைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. நண்பர்களுடன் மால்களுக்கு சென்று, மனமகிழ்ச்சி பெருக, உண்டு மகிழ்ந்த காலமெல்லாம் கனவாக தெரியும். வீட்டின் சமையல், உறவுகளின் இல்ல விருந்து உபசாரங்களும் கலந்து கொண்ட, ஒரு திருப்தியை தரும். வீட்டில் நடக்க இருந்த திருமணம்,தடை தாமதங்களுக்குப் பிறகு, மகிழ்ச்சிகரமாக, சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று சுப விரயங்கள் அதிகரிக்கும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, பணவரவு அதிகரிப்பதால், மனதில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்குப், பேரின்பம் பெறும் விதமாக மனைவிக்கு குழந்தை பேறு உண்டாகி இருக்கும் சேதி கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பீர்கள். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கை செலவுகளைக் குறைத்து சேமிப்புகளை அதிகரிப்பது நல்லது. நீங்கள் ஆற்றிய பொதுச் சேவை காரணமாக மக்கள் மத்தியில் புகழ் பெறுவீர்கள். புதிய கல்விச்சாலைகளில் இடம்பெற அதிக சிரமங்கள் ஏற்படும். அரசு மூலம் அரசுப் பணியாளர்களுக்கு வரவேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும்.

திருவாதிரை ---

இந்த வாரம் இறை தொண்டில் ஈடுபாடு அதிகரித்து, பக்தி மேலீட்டால் பல நற்பணிகள் செய்ய முற்படுவார்கள். பரிதவிக்கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள். தெய்வத்தின் கருணையால் வாழ்க்கையில் பல புதிய திருப்பங்கள் ஏற்படும். இடைவிடாத உழைப்பின் காரணமாக வேலைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். தாய்வழி உறவுகளின் உதவிகள் கிடைக்கும். அரசு வகையில் வரி பாக்கிகளை உடனே கட்டவேண்டிய கெடுபிடி இருக்கும். அதற்குத் தேவையான பணவரவுகள், பணவுதவி கள் கிடைத்துச் சிக்கல்கள் தீரும். அரசுப் பணியாளர்களுக்கு பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆலோசனைப்படி நடப்பதும், அவர்கள் சொல்லுக்கு மறுபேச்சு பேசாமல் பணிந்து நடப்பது பணியில் முன்னேற்றங்களைத் தரும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் உங்கள் வாழ்க்கைப் பாதையில்யிருந்த வந்த தடைகள் எனும் முட்கள் விலகி, இன்பமெனும் அழகிய மலர்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு பூக்கும். அதன் காரணமாக கவலைகள் மறைந்து, மனதில் ஓர் ஏகாந்தமான அமைதி நிலவும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பண வருமானம் தாராளமாக இருக்கும். உற்றார், உறவினர் வருகை குறையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கி உல்லாசமாக பொழுது போக்கிய காலங்கள் கனவாகும். தாய், மனைவி, தோழி போன்ற பெண்ணினத்தின் மூலம் சிலருக்கு, இலாபம் ஏற்படும். வீண்பழி, தேவையற்ற விமர்சனங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க, உறவுகள் மத்தியில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் சிலருக்கு ஆன்மிகப் பெரியவர்கள் அறிவுரைகள் கிடைத்து, வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களும் கிடைக்கும். சுற்றமும் நட்பும் சூழ சொகுசு வாகனத்தில் உல்லாச சுற்றுலா பயணங்கள் சென்றது கனவு போல் தோன்றும். தற்போது பயணங்கள் செல்வதே பெறும் பாடத் தெரியும். வீட்டில் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாடுகளை தவிர்க்க, அனுசரித்துச் செல்வது நல்லது. வங்கியில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வேண்டிய நிர்பந்தம் எழும். பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் சமயம் பார்த்து உங்களுக்கு தேவையான வேலைகளை சாதித்துக் கொள்ளலாம்.

பூசம் --

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் நன்மையும் ஏற்படும். இதுநாள்வரை பிரிந்திருந்த தம்பதிகளுக்குள்ள ஒற்றுமை ஏற்பட்டு, மீண்டும் இணைந்து பேரின்பம் அடைவது. மிகவும் அன்பு செலுத்தும் பெண்கள் ஆதரவால் லாபம் ஏற்படும். சிலருக்குக் குழந்தைகள் சுட்டித்தனம், சேட்டைகள் கண்டு எரிச்சல் ஏற்படும். மாணவர்கள் வீட்டில் இருந்தே படிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். புதிய தொழில் முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. அரசு உதவிகள் கிடைக்க தாமதப்படும். புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு முன்னேற்றம் இருக்கும்.

ஆயில்யம் –

இந்த வாரம் சிலருக்குத் தோற்றத்தில் புதிய பொலி ஏற்படும். சுற்று வட்டாரத்தில் பெயரும், புகழும் ஓங்கும். சிலருக்கு வாழ்வே சுமையாக இருக்கும். படிப்பில் தீவிர முயற்சியின் காரணமாக அறிவுத்திறன் கூடும். சிலர் போலி கம்பெனிகள் நம்பி முதலீடு செய்து, பண விஷயங்களில் ஏமாறலாம். எச்சரிக்கை தேவை. நல்லவர்களுடன் பழகுவது நல்லது. சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்குவன்மை ஓங்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தீட்டிய புதிய திட்டங்கள் நிறைவேறக் காலதாமதம் ஆகலாம்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தந்தையின் உறவுகள் மூலம் வேண்டிய உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் ஆன்லைன் கல்வி முறையில் படிக்க நேரும். விளையாட்டுத் தனங்களை ஒதுக்கி விவேகத்துடன் நடப்பது நல்லது. சிலருக்குப் பணியில், விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்குவன்மை ஓங்கும். தாமதமாகிய, புதிய வீடு, மனை ஆகியவைகளின் பத்திரப் பதிவுகள் தற்சமயம் நடக்கும். சிலருக்குப் பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

பூரம் –

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, அன்றாட வருமானத்தில் அபார வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதார நிலை உயரும். வங்கிக் கணக்குகளில் கையிருப்பு கூடும். சிலருக்கு. விரும்பிய பெண்ணுடன் திருமணப் பேச்சுக்கள் நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்பட்டு மனமகிழ்ச்சி கிடைக்கும். சிலருக்குப் புதிய சொத்துக்கள், மனை வாங்கும் யோகம் ஏற்படும். அரசு அதிகாரிகளுக்கு துணை புரிய அநேக கீழ்நிலை உதவியாளர்கள் அமைவர். அரசு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு அதற்கான அனுகூலமான பதில்கள் அரசிடமிருந்து கிடைக்கும். எழுத்தாளர்களுக்கு தங்கள் தொழிலில் ஏற்றம் ஏற்படும். குடும்ப ஆரோக்கியம் மேம்படும். சுற்று வட்டாரத்தில் வீண் சச்சரவுகளை விலைக்கு வாங்காதீர்கள். மனைவியின் ஒத்துழைப்பால் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் உடன்பிறப்புகள் நன்மைகள் உண்டு. குடும்பத்தில் சுபகாரியம் செலவுகள் அதிகரிக்கும். பயணங்களை ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு திடீர் பயணங்களால் தொல்லைகள் ஏற்படும். அதிகாரம் மிக்க தலைமை பதவிகள் தேடிவரும். வீரம் பெருகும். தங்கள் சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு, புகழும் ஓங்கும். உங்கள் உயர்வைக் கண்டு பிறர் பொறாமை கொள்வர். சிலருக்கு வெப்ப சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். வியாபாரிகள் புதிய முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு, உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். கௌரவப் பட்டங்கள் பதவிகள் கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பிரகாசமாய் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. அளவோடு உணவருந்தி அஜீரணத்தை குறையுங்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் உங்களுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஓரளவு பணவரவு ஏற்படும். வெளியூர் பயணங்களை ஒத்திப் போடுங்கள். வீட்டில் தாமதப்பட்ட சுபகாரியங்கள் ஏற்பட்டு, செலவுகள் அதிகரிக்கும். அதிக உழைப்பிற்குப் பிறகு எடுத்த காரியங்கள் ஈடேறும். அதன் மூலம் பணவரவு மற்றும் லாபங்கள் பெருகும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. சில மாணவர்கள் கடின உழைப்பால், கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். சிலர் நடக்கும் போது கீழே விழுந்து காயங்கள் ஏற்பட நேரும். எனவே, எச்சரிக்கை தேவை. படிப்பைப் பொறுத்தவரை, உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை.

அஸ்தம் –

இந்த வாரம் சிலருக்கு, திருமண வாழ்க்கை திருப்திகரமாகும், மகிழ்ச்சி மிக்கதாகவும் அமையும். அரசு பணிபுரியும் பெண்களுக்குத் தங்கள் பணிகளில் தடை, தாமதங்கள் ஏற்படும். டென்ஷன் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு ஏற்படும் இலாபத்தால், பணவரவு அதிகரிக்கும். தொழிலாளர்களின் ஒத்துழைப்பு உற்பத்தி பெருகி, அதன் காரணமாக அவர்களின் வருமானம் அதிகரிக்கும். துவக்கத்தில் தீட்டிய முக்கிய, புதிய திட்டங்கள் நிறைவேறக் காலதாமதம் ஆகலாம். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வீர்கள். சிலருக்கு தங்கள் பகைவர்களால் பயம் ஏற்படலாம். எனவே, அவர்களிடமிருந்து தூர விலகி இருப்பது நல்லது. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் கிடைக்கத் தாமதம் ஆகலாம்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். அதற்குத் தக்க செலவுகளும் கூடும். வீட்டு மட்டும், உள்ள உறவுகளோடு, கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புது பதவிகளும் ஏற்பட்டு சம்பள உயர்வு ஏற்படும். வியாபாரம் சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்களில் ஆதாயங்கள் ஏற்படும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால், படப்பிடிப்பு தாமதமாகும். பிரபலமானவர்களின் நட்பால் உங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வீர்கள். அரசு மரியாதை கிட்டும். அரசு பணியில் உள்ள பெண்களுக்கு, பலநாள் கனவு, உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்புகள் தாமதப்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் குடும்பத்தில் சுகமும் ஆரோக்கியமும் பெருகும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்குத் தங்கள் விருப்பம் போல் உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். தந்தைக்கு நன்மைகள் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்புகள் தள்ளிப் போகலாம். உங்கள் குழந்தைகளை பாசத்துடன் அணுகி, அவர்களுக்குத் தேவையானவற்றை மறுக்காமல் வாங்கிக் கொடுங்கள். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடக்கும்.

சுவாதி –

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும், தனசேர்க்கை ஆகியவற்றால் வரும் இன்பத்துக்கு அளவே இருக்காது.. புதிய திட்டங்களால் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது வேகத்தை குறைத்து, எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். பெண் குழந்தைகளின் வளர்ப்பில் கூடுதல் கவனம் கொடுங்கள், அவர்கள் போக்கில் விடாமல் அடக்கி வைப்பது நல்லது. உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும், அதிகாரிகள் அனுசரணையால் வெற்றிகரமாக முடியும். குழந்தைகள் விரும்பிய பொருட்களை எல்லாம் உடனே வாங்கித் தருவீர்கள்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரும். இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். புதிய தொழில் தொடங்க, எதிர்பார்த்தபடி அரசு உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். பெரிய மனிதர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆதரவால் நினைத்த காரியங்கள் எளிதில் முடிவடையும். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். சிலருக்குப் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் அனைத்து வசதிகளும் அதிகரித்து ஆனந்தம் பெருகும். வீட்டில் ஏற்படும் புதிய வசதிகள் மனம் மகிழும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமான வாங்குவீர்கள். ஆரவாரம் மிக்க சூழலில், கேளிக்கை விருந்துகள் மற்றும் பெண்களின் அருகாமை ஆனந்தமளிக்கும். நல்ல பண்பாளர்களின் தொடர்புகள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். எப்போதும் மனதில் ஏற்படும் தெய்வ சிந்தனையால் மனநிம்மதி கூடும். சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக மாற்றியவர்கள். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். பங்களா போன்ற பெரிய வீடு அமையும். சிலருக்குக் குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர்.

அனுஷம் –

இந்த வாரம் இனிய பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரும். அரசு பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். உங்கள் எண்ணமெல்லாம் பணத்தை பற்றியதாக இருக்கும். அரசு தொடர்பான விவகாரங்களில் தொல்லை ஏற்படும். தீயோர் தொடர்பு சஞ்சலம் ஏற்படும். அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்வது தவிருங்கள். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

கேட்டை –

இந்த வாரம் செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, ஓரளவு இலாபமும் அதிகரிக்கும். அரசு உயர் அதிகாரிகளின் சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிலருக்கு தலைவலி / கண்ணில் பிரச்சனைகள் வந்து சீராகிவிடும். கவலை வேண்டாம். பெண்கள் தங்கள் சேமிப்பை வைத்து புதிய ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடாதிருப்பது இழப்பை தவிர்க்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பக்தி சொற்பொழிவுகள், பாடல்கள் கேட்பதில் ஆர்வம் எழும். எதிர்பாராத தனவரவு, புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவை ஏற்படும். தொழிலில் புதிய விரிவாக்கங்கள் செய்வதால் எதிர்பாராத அளவுக்கு அசாத்திய வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவி மற்றும் அனுகூல தால் உயர் பதவிக்கான சிபாரிசுகள் மேற்கொள்ளப்படும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். நிலையான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பல புண்ணியத் தல யாத்திரைகள் சென்று மகிழ்வீர்கள். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும்.

பூராடம் –

இந்த வாரம் குடும்பத்தில் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை இணையதளங்களைப் பார்ப்பதில் வீணடிக்காமல், கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரித்தால் உள்ளம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் அசாத்திய வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் அனுகூல தால் உயர் பதவிக்கான சிபாரிசுகள் மேற்கொள்ளப்படும். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவார்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் திருமண வயது வந்தும், திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்படும். நல்ல விஷயங்களுக்காக அலைச்சல்கள் ஏற்படும். தேவையற்ற நெடுந்தூரப் பயணங்கள் மேற்கொள்ள நேர்ந்தாலும், அதில் இலாபம் ஏற்படும். அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு தெய்வ சங்கல்பத்தால் புத்திர பாக்கியம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரித்து, அதன் காரணமாக குடும்பத்தில் அமைதி நிலவும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய்தி வரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஓய்வெடுக்கும் விதமாக நமக்கு எல்லா நாட்களும் ஞாயிறாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. இந்த வாரம் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் நல்ல ஊதியம் அளிக்கும். வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி அனுபவிப்பீர்கள்.

திருவோணம் -

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் பணம் வரவு ஏற்படும். தங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். வேளாண் பொருட்கள் உற்பத்தி விவசாயிகளுக்கு திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருப்பது நல்லது அல்ல. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூர பயணங்களில் எச்சரிக்கை தேவை. அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். புதிய தொழில் தொடர்புகள் வணிக நிலை எதிர்பார்த்தபடி உயரும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். தேர்வுகளுக்காக படிக்கும் மாணவர்கள் கவனமாக படித்தால், கல்வியில் தேர்ச்சி உண்டாகும். சேவை செய்யும் முகமாக பொது நலத்தில் ஈடுபட்டுப் புகழ் பெறுவீர்கள். பெண்களின் முன்னேற்றத்தில் குடும்பத்தினர் அக்கறை கொள்வர்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் அனைத்து முக்கிய காரியங்களிலும் எறும்பை ஒத்த சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். புதிய வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். பக்தி மார்க்கத்தில் தீவிர ஈடுபாடு உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வசதி வாய்ப்புகள் உருவாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் அதிக இலாபம் கிடைக்கும். இந்த வாரம் சிலருக்குக் காரியத் தடைகள், வழக்கு வியாஜ்ஜியங்கள் ஏற்படலாம். அவற்றை சில காலம் ஒத்தி போடுவது நல்லது கூட்டு வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் எச்சரிக்கை தேவை.

சதயம்-

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் குறி காட்டப்படுகிறது. வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். வங்கிக் கணக்கில் ரொக்க இருப்பு கூடும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் எளிதில் கைகூடும். குடும்ப உறவுகளின் பரிபூர்ண ஒத்துழைப்புக் கிடைக்கும். தனச்சேர்க்கை உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பணிச்சுமை குறைவால் மன மகிழ்ச்சி ஏற்படும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். சொற்பொழிவுத் திறன் அதிகரிக்கும். அரசு பதவியில் உள்ளவர்கள் வேண்டியவர்களாக அவர்களால் பயன் பெறுவர்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை வரவுகள் அதிகமாக திருப்திகரமான வாரமாக இருக்கும். நீண்ட நாளாக வராத கடன் பாக்கிகள் வசூலாகும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலமான உபகாரங்கள் தடைப்படாது. தொழில் தொடர்பாக எடுத்த புதிய முயற்சிகள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்பட்டு மகிழ் உண்டாகும். புதிய உயர்தரமான வாகன வசதிகள் அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். தெய்வப் பிரார்த்தனையால் பெண்களின் வேண்டுதல்கள் நிறைவேற, வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்..

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வார எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான தனவரவு ஏற்படும். தத்துவ உபதேசங்கள், பக்திச் சொற்பொழிவு கேட்பதில் ஆர்வம் ஏற்படும். அதன் காரணமாக மனதில் மிகுந்த உற்சாகம் அமைதியும் பெருகும். நவநாகரீக ஆடைகள், ருசியான உணவு வகைகள் ஆகியவை கிட்டும். தொட்டில் ஆட்டிக் கொஞ்சி மகிழ, புத்திர பாக்கியம் ஏற்படும். சினத்தை அடக்கினால் சிக்கல்கள் தீரும். செலவுகள் அதிகமாக புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீய குணம் உள்ளவர்கள் மூலம் பயம் ஏற்படும். எனவே, அத்தகைய நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது. புதிய முதலீடுகளால் தொழில் ஏற்றம் காணும். மிகப் பிரபலமான நபர் சந்திப்பால், நீங்கள் விரும்பிய இடத்திற்கு, இடமாற்றம் பெறுவீர்கள்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் ஆரம்பத்தில் வீட்டு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய சொகுசு வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் தங்கள் குடும்பத்தையும், பணியையும் ஒரு சேர பார்ப்பதில் இடைஞ்சல்கள் ஏற்படும்., ஓய்வின்றி, அடிக்கடி ஏற்படும் வெளியூர்ப் பயணங்கள் மூலம் அசதி ஏற்படும். அரசுவகையில் வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியம்.

ரேவதி-

இந்த மாணவர்கள் சுலபமாக பாடங்கள் அனைத்தையும் கிரகித்துக் கொள்வர். மனைவியிடம் மட்டுமல்லாமல் நண்பர், மற்றும் உறவுகளிடம் கருத்து முரண்பாடுகளை தவிர்த்து நிம்மதி பிறக்கும். பெண்களால் முழுமையாக சந்தோஷம் இருக்கும். வாகனங்களில் எச்சரிக்கையுடன் செல்லவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரித்து, உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல் இருந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் வாசல் வந்து நிற்கும்.. மனக்கவலைகள் மனைவியின் அரவணைப்பால் குறையும். இனிய கல்விச் சுற்றுலா செல்லும் வாய்ப்பு ஏற்படும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் கிரேஸி மோகன் எழுதி, நடித்து கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பபட்ட "சிரி சிரி கிரேஸி" நாடகத்தின் நூல் வடிவமான "சிரி சிரி கிரேஸி" புத்தகத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட அதனை பாராளுமன்ற உறுப்பினர் கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார். இதில் மாது பாலாஜி, ரவி அப்பாசாமி, இயக்குநர் எஸ்.பி. காந்தன், அல்லயன்ஸ் சீனிவாசன், பிரசாந்த் சீனிவாசன், துக்ளக் இதயா, அருணாசலம் ஆகியோர் உள்ளனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி உள்பட 19 மாவட்டங்களில் பூத் (பாகம்) கிளை கழகங்களை சேர்ந்த நிர்வாகிகளை ஆன்லைனில் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டு பணியாற்றி வரும் தகவல் தொழில்நுட்ப பிரிவை சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

# சட்டசபை தேர்தலுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

தெளிவற்ற முறையில் ஆதார் பற்றி குறிப்பிட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சரிபார்ப்பில் நேர்மைத் தன்மை இல்லை; வெளிப்படைத்தன்மை இல்லை. அந்த அறிவிப்பில் பயன்படுத்தப் பட்டுள்ள சொற்றொடர் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. "ஆதார் சில நிபந்தனைகளுடன் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்படும்" என்பதே தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடாக உள்ளது.

### குழப்பமாக உள்ளது...

அதே அறிவிப்பின் இணைப்பு-III-இல் "வாக்காளர் பிறந்த தேதி தொடர்புடைய ஆவணங்களை வாக்குப் பதிவு அதிகாரிக்கு அவர் கேட்கும் போது கொடுக்க வேண்டும்" எனவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எப்போது கேட்பார்கள்? தரப்படும் நோட்டீஸ் எந்த படிவத்தில் யார் தருவார்? எந்த படிவத்தில் ஆவணங்கள் தரப்பட வேண்டும்? ஆவணத்தைச் சமர்ப்பிக்க எவ்வளவு நாட்கள் தரப்படும்? யாரிடம் தர வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடையில்லை. இது தேர்தல் ஆணையம் ஏற்படுத்தும் குழப்பத்தைக் காட்டுகிறது.

### அதிக சந்தேகத்தை...

இப்படி குழப்பி, உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது என்றே தெரிகிறது. ஒரு வாக்காளர் ஆவணம் வழங்க வேண்டுமா வேண்டாமா, யாரிடம் வழங்குவது என்ற எந்த அடிப்படை கேள்விகளுக்கும் உரிய பதில்களும் - விளக்கங்களும் இல்லை. இந்தக் குழப்பமானது தகுதிபெற்ற வாக்காளர்களை நீக்கவே பயன்படும். தேர்தல் ஆணையத்தின் அவசரமே நமக்கு அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

### பருவமழை காலம்...

கணக்கெடுப்பு காலம் என நிச்சயிக்கப்பட்டுள்ள *04.11.2025* முதல் *04.12.2025* வரையிலான காலம் தமிழ் நாட்டில் வடகிழக்குப் பருவ மழையின் உச்ச காலம் ஆகும். இந்த காலத்தில் கன மழை மற்றும் மோசமான வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலோர் கிராமப்புற மக்களாக - விவசாயிகளாக இருப்பதால், கணக்கெடுப்பு படிவங்களைப் பெற்று நிரப்பி, திருப்பி அளிக்க நேரம் கிடைக்காது. இந்த செயல்முறையில் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் நீக்கப்படுவர் என்ற நியாயமான அச்சம் உள்ளது.

### வாக்குரிமையை...

வருவாய்த் துறையும் கன மழையால் எழும் சூழ்நிலைகளைக் கையாள்வதில் ஈடுபட வேண்டும் . எனவே, இந்த காலம் கணக்கெடுப்புக்கு உகந்த காலம் இல்லை என்று இக்கூட்டம் கருதுகிறது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவதற்கு முன்பு உள்ள காலகட்டத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை, பொங்கல் திருநாள் ஆகியவை இருக்கிறது. இதனால் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணியில் விடுபடும் வாக்காளர்களோ, சேர விரும்பும் வாக்காளர்களோ மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி தங்களது வாக்குரிமையை இழக்கும் நிலை ஏற்படும் என்று இக்கூட்டம் தனது அச்சத்தைப் பதிவு செய்ய விரும்புகிறது.

### அதிகாரத்தை வழங்கி...

வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணி என்பது நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலுக்கு மிக முக்கியம்; நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயிர்மூச்சாகக் கருதப்படுகிறது. அரசியல் சட்டமும் - மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும் தேர்தல் ஆணையத்திற்கு இதற்காகவே அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. நடுநிலைமையுடன், பாரபட்சமின்றி எந்த அரசியல் கட்சிக்கும் துணை போகாமல் சுதந்திரமான அமைப்பாகத் தேர்தல் ஆணையம் செயல்பட வேண்டும். தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் சமகளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் மிக முக்கியமான கடமையைத் தேர்தல் ஆணையத்திடம் அரசியல் சட்டம் ஒப்படைத்துள்ளது.

### ஒரு கட்சி சார்பாக...

ஆனால் பொறுப்புள்ள கடமையை நிறைவேற்ற வேண்டிய தேர்தல் ஆணையமே மத்தியில் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியின் சார்பாக நின்று செயல்படுவதாகக் குற்றம் சாட்டுகிறோம். சுப்ரீம் கோர்ட்டில் உள்ள எஸ்.ஐ.ஆர். வழக்கில் இறுதித் தீர்ப்பு வராத நிலையில், தனது *27-10-2025* அறிவிப்பின் படி, தமிழ்நாட்டில் நடத்துவதாக அறிவித்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) முழுக்க முழுக்க ஜனநாயக விரோதமான, தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கு எதிரான செயலாகும். எனவே இந்த எஸ்.ஐ.ஆர். ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. ஆகவே இந்த எஸ்.ஐ.ஆர். சீராய்வை தேர்தல் ஆணையம் இப்போது கைவிடும்படி அனைத்துக் கட்சிகளின் இக்கூட்டம் தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் வைக்கிறது.

### தேர்தலுக்குப் பின்பு..

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட்டு, சுப்ரீம் கோர்ட்டின் வழிகாட்டுதலை வெளிப்படையாகக் கடைப் பிடித்து, உரிய அவகாசம் தந்து, *2026* தேர்தலுக்குப் பின்பு, எக்கட்சிக்கும் சார்பற்ற நிலையில் தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர்.-ஐ நடத்த வேண்டும். தேர்தல் ஆணையம் இந்தக் கருத்துகளை ஏற்காததால், தமிழ்நாட்டு வாக்காளர்கள் அனைவரின் வாக்குரிமையையும் நிலைநாட்ட சுப்ரீம் கோர்ட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்வது எனவும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எஸ்.ஐ.ஆர். குறித்து கவனமாக பணியாற்ற வேண்டும்:

# அ.தி.மு.க. பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்

சென்னை, நவ. *03*-

எஸ்.ஐ.ஆர். குறித்து கவனமாக பணியாற்ற வேண்டும் என்று அ.தி.மு.க. பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமையகத்தில் நேற்று மாவட்ட பொறுப் பா ளர் க ளு டன் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. எஸ்.ஐ.ஆர். பணிகள் விரைவில் தொடங்கவுள்ள நிலையில் மாவட்ட பொறுப்பாளர்களுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை கண்காணிப்பது குறித்து ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், நாளை நவம்பர் *4*ம் தேதி தொடங்க உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகளில் பூத் கமிட்டி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும் என அ.தி.மு.க. ஐடி பிரிவு பொறுப்பாளர்களுக்கு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.



● மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட 83-வது வார்டு சோலை அழகுபுரத்தில் அங்கன்வாடி புதிய கட்டிடம் அமைப்பதற்கான பூமிபூஜையை கவுன்சிலர் எஸ்.எம்.டி.ரவி தலைமையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், பைக்காரா கருப்பசாமி, முத்துவேல், வட்ட செயலாளர்கள் பால்பாண்டி, பாலமுருகன், சண்முகசுந்தரம், பாலசக்திவேல், ராமகிருஷ்ணன், சரவணன், செந்தில்குமார், கணேசன் உள்ளனர்.



● சென்னை மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் சார்பில் சென்னை நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய சென்னை ரன்ஸ் பல்வேறு பிரிவு ஓட்டங்களை துணை முதலல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்ட பாசனத்துக்காக வைகை அணையில் இருந்து நீர் திறப்பு

ஆண்டிபட்டி, நவ. *03*-

வைகை அணையில் இருந்து சிவகங்கை மாவட்ட பூர்வீக பாசனப் பகுதிகளுக்காக *2* ஆயிரம் கன அடி வீதம் நேற்று (நவ.*2*) தண்ணீர் திறக்கப்பட்டது. ஆகவே கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி நீர்வளத் துறை அதிகாரிகள் கேட்டு கொண்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் தொடக்கமாக கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஆண்டிபட்டி அருகே *71* அடி உயரத்தில் அமைந்துள்ள வைகை அணையின் நீர்மட்டம் கிடு கிடுவென உயர்ந்து கடந்த அக்டோபர் *20*-ம் தேதி அன்று *69* அடியை எட்டியது. ஆகவே பாதுகாப்பு கருதி தேனி, திண்டுக்கல் மதுரை சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய *5* மாவட்டங்களுக்கு இறுதி மற்றும் மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உபரி நீர் ஆற்றின் வழியாக திறக்கப்பட்டது. தொடர்ந்து மூல வைகை, முல்லை பெரியாற்றில் இருந்தும் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகளவில் இருந்ததால் நீர்மட்டம் *70* அடியை கடந்தது. இதனைத் தொடர்ந்து வைகை பூர்வீக பாசனப் பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய *3* மாவட்டங்களில் உள்ள கண்மாய்களில் நீர் நிரப்பும் வகையில் *1,824* மில்லியன் கன அடி நீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

அதனடிப்படையில் முதற்கட்டமாக கடந்த அக்.*27* முதல் அக்.*31*-ம் தேதி வரை ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பூர்வீக பாசனப் பகுதி *624* மில்லியன் கன அடி நீர் திறக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பூர்வீக பாசனம் *2*-ம் பகுதியான சிவகங்கை மாவட்டத்துக்கு நேற்று (நவ.*2*) *2* ஆயிரம் கன அடிநீர் திறக்கப்பட்டது. வரும் நவ.*6*-ம் தேதி வரை மொத்தம் *772* மில்லியன் கனஅடி நீர் திறக்கப்பட உள்ளது.

பின்பு நவ.*8*-ம் தேதி முதல் நவம்.*13*ம் தேதி வரை மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை பூர்வீக பாசனப் பகுதி மொத்தம் *428* மில்லியன் கன அடி நீர் திறக்கப்பட உள்ளன. இந்த நீர் திறப்பின் மூலம் *3* மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து *36* ஆயிரத்து *109* ஏக்கர் பூர்வீக நிலங்கள் பாசன வசதி அடையும் என்பதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்றைய நிலவரப்படி பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களுக்காக மொத்தம் *3* ஆயிரத்து *449* கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஆகவே கரையோர மக்கள் ஆற்றுக்குள் இறங்க வேண்டாம். பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லும்படி நீர்வளத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



● வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர், சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர், வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



● மதுரையில் நேற்று கல்லறை திருநாளையொட்டி கல்லறை தோட்டங்களுக்கு சென்ற கிறிஸ்தவர்கள் தங்கள் முன்னோர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து மலர்களால் அலங்கரித்து மெழுகுவர்த்தி ஏற்றி பிரார்த்தனை செய்தனர்.